தற்காலிகத் தரவுகளின்படி உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1978 இன் ரூ. 62, 800 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து 1979 இல் 69,780 இலட்சமாகும். எனினும் மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் கணிக்குமிடத்து சேமிப்புக்கள் 15 சதவீதத்திலிருந்து 1979இல் 13 சதவீதமாக குறிப்பிடத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி உண்மையான வருவாயில் ஏற்பட்ட மாற்றங்கட்கு நுகர்வினை சீராக்கப்படுவதன் வாயிலாக தெளிவாகிறது. மறு சொல்லில், ஒரு பண வீக்க நிலைமையில் வருவாயில் செலவிடுவதற்கான பெரும்பங்கு சேமிப்புக்களை மேற்கொள்ளாது நுகர்வில் செலவிடப்பட்டுள்ளது. சேமிப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்த இன்னுமொரு காரணியாக புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமையால் இது மக்களின் வருவாய்களை அதிகரித்தாலும், வருவாய்களின் பெரும்பங்கு நுகர்வுக்கே செலவழிக்கப்பட்டது. புள்ளி விபரப்பின்னிணைப்பிலுள்ள நீண்டகாலச் சேமிப்புக்கள் பற்றியதரவுகள் குறைந்த வீதத்தில் சேமிப்புகள் இருந்தமையை எடுத்துக்காட்டினாலும் இது எழுபதின் நடுப்பகுதியில் காணப்பட்டதிலும் இன்னும் உயர்வாகவே உள்ளமையைக் காட்டுகிறது.

இவ்வாறான முடிவுக்குப் பல காரணங்கள் உள. ஏனெனில் கடந்த சில ஆண்டுகளாக மேற் கொள்ளப்பட்ட சேமிப்புக்கள் பற்றிய மதிப்பீடு, உள்ளடக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதியினை குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது. இது இறக்குமதி தாராளமாக்கலின் பின்னர் குறிப்பாக முதன்மைத் தன்மையைப் பெறுகிறது. ஏனெனில் தாராளமாக்கலின் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலை, நுகர்வுப் பொருட்களின் பெரும் அளவுகளின் காரணமாக 1979 ஆம் ஆண்டில் அரசதுறையின் பட்டியல்கள் பெரும்பாலும் மூன்று மடங்காக உயர்வடைந்துள்ளது. இது, முன்னர் எடுத்துரைக்கப்பட்ட பகுப்பாய்வினால் உறுதியாகிறது. தனியார்துறையின் பட்டியல் வளர்ச்சியினை சரியான முறையில் மதிப்பீடு செய்து கணிக்கப்படின் 1979 ஆம் ஆண்டின் சேமிப்பு விகிதம் 1978 ஆம் ஆண்டின் மட்டத்திற்கு உயர்வடையும்.

1979 ஆம் ஆண்டில் ஊக்குவிக்கத்தக்கவகையில் மூலதன ஆக்கத்தில் காணப்பட்ட வளர்ச்சி, உள்நாட்டு சேமிப்பின் நிலையானதொரு விகிதத்தின் பின்னணியில் முதலீட்டுக்கு 1979 ஆம் ஆண்டில் உயர்ந்தளவில் வெளிநாட்டு மூலவளங்கள் பயன்படுத்தப்பட்டமையை தெளிவுபடுத்துகிறது. 1979 இல் முதலீட்டின் மூன்றில் இரண்டு பகுதி அரச துறையில் ஏற்பட்டது. இதனை 1978 இன் 60 சதவீதத்துடன் ஒப்புநோக்கலாம்.

## வேளாண்மை

கிடைக்கத்தக்க பிந்திய தரவுகளின்படி, 1979 இல் வேளாண்மைத்துறையின் செயலாற்றல் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. மரப்பயிர்களில் தெங்கு உற்பத்தி 1977 இல் இருந்த ஆகக்குறைந்த மட்டத்திலிருந்து மீட்சி பெற்றது, விலைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்ட நிலையிலும் இறப்பருற்பத்தி ஏறக்குறைய 2 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1978 இலிருந்து விலைகள் வீழ்ச்சி அடைந்து சென்ற நிலையிலும் தேயிலை உற்பத்தி சிறிதளவில் அதிகரித்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் சமனற்ற முறையில் அமைந்து, கறுவா, கராம்பு, கோப்பி, ஏலம் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்தும், கொக்கோ, மிளகு, பப்பாளிப்பால் ஆகியவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. ஆண்டுப் பயிர்களில், நெல் உற்பத்தி சிறிதளவில் அதிகரித்

திருப்பதாக மதிப்பிடப்பட்ட வேளையில் வெங்காயம், மிளகாய், உள்நாட்டுத் தானியங்கள் போன்ற ஏனைய உணவுப்பயிர்களின் உற்பத்தி முன்னைய ஆண்டுகளின் கீழ்மட்டங்களுக்கு அல்லது அதிலும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. 1978 இல் 11 சத வீதத்தால் உயர்வடைந்த கரும்புச்சீனி உற்பத்தி, 1979 இல் 26 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. 1978இல் 12 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்ட மீனுற்பத்தி 1979 இல் 9சத வீதத்தால் மெதுவாக அதிகரித்தது. தேசிய பாற்சபையின் சேகரிப்புக்கள் 27 சத வீதத்தால் அதிகரித்த போதிலும், 1979 இல பாலுற்பத்திபற்றிய அரசின் மதிப்பீடுகள் 7 சதவீத வீழ்ச்சியைக்காட்டின. முட்டையுற்பத்தி 20 சத வீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது.

இவையெல்லாவற்றுடனும் கடந்த பல ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட தேங்கிய நிலையைப் பொறுத்தவரையில் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண்மைத்துறையின் நம்பிக்கையற்ற செயலாற்றத்தினை கூடிய அளவு கவனத்துடன் நோக்குதல் வேண்டும். உண்மையில், தென் மேல் பருவ மழை இல்லாமல் போனமை, 1978 இன் பிற்பகுதியில் திடீரென ஏற்பட்ட சூறாவளியின் பின் விளைவுகள் போன்ற சில விதி விலக்கான காரணிகளும் காணப்பட்டன. ஆனால் இத்துறையின் சமனற்ற செயலாற்றத்துக்கு அரசுடைமையான பெருந்தோட்டங்களின் முகாமைப் பிரச்சனைகள், நுகர்வோருக்கேற்றமுறையில் விலையிடல், உற்பத்தியைத் தடை செய்த உதவுதொகைக் கொள்கைகள் ஏற்றுமதிப் பயிர்கள் மீதான கூடியதும் நெகிழ்ச்சியற்றதுமான வரிவிதிப்பு போன்ற தவிர்க்கக்கூடிய பல காரணிகளே ஏதுவாயிருந்தன. இச்சிக்கல்கள் அண்மைக்கால ஆண்டறிக்கைகளில் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறையில் மேலும் நிறுவன மாற்றங்கள் 1979 ம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்றன, நீண்ட காலமாகப் பின்தங்கிய கமநலச் சீர்திருத்தங்கள் 1979 இல் ஏற்பட்டன. முன்னைய ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப் பட்டதுபோல், அனைத்தையுமுள்ளடக்கிய கமநல நிறுவனம் அல்லது அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை, 1977 இலிருந்து அரசு குறிப்பிட்ட சில அனைத்தையும் உள்ளடக்காத நிறுவன ஒழுங்குகளை மேற்கொண்டது. இறுதியாக முன்னைய 1972 இன் வேளாண்மை உற்பத்திச் சட்டம் 1973 இன் வேளாண்மைக் காணிச்சட்டம் ஆகியவற்றுக்குப் பதிலாக 1979 இன் 58 ஆம் எண்கொண்ட கமநலப்பணிகள் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

1979 சீர்திருத்தமானது வாடகைக் குடியிருப்பாளர்களினால் செலுத்தப் படும் வாடகை, வாடகைக் குடியிருப்பாளரொருவர் குறிப்பிட்ட அளவில் வேளாண்மைக் காணியை வைத்திருக்கும் உரிமை, ஆகிய இரண்டினதும் தொடர்பில் முன்னைய கமநல சீர்திருத்தச் சட்டங்களிலிருந்து குறிப்பிடத்தக்க முறையில் வேறுபட்டதாகும் புதிய சட்டத்தின்கீழ் வாடகைக் கமக்காரர்கள் ஏக்கரொன்றுக்கு 15 புசல் நெல் (எக்டேயரொன்றுக்கு 773.5 கி. கிறாம்) அல்லது விளைவில் நான்கிலொருபங்கு இரண்டில் எது கூடியதோ அதைச் செலுத்த வேண்டும் அதே வேளையில் முன்னைய சட்டம் இதேமாதிரியானதாக அமைந்திருந்தாலும் எது குறைந்ததோ அதைச் செலுத்தவேண்டுமெனக் கூறியது. இதன் நடைமுறையில், எல்லாக் குத்தகைக் கமக்காரர்களும் காணிச்சொந்தக்காரர்களுக்கு விளைந்தபயிரின் மிகக்கூடிய பங்கைச்செலுத்தவேண்டியிருந்தது. உண்மையில் இவ்வேற்பாட்டின் நோக்கம் கமக்காரர்களைக் கூடிய திறனுடன்

நிலத்தைப் பயிரிடச் செய்வதேயாகும். ஆனால் இது கமக்காரருக்கான ஊக்குவிப்புக்களைப் பாதிக்குமா என்பது கவனமாக ஆராயப்படவேண்டியதாகும்.

குத்தகைக்காரர் ஒருவரால் பயிரிடப்படும் ஆகக்கூடிய அளவு 5 ஏக்கர்களை (2 எக்டேயர்கள்) விஞ்சக்கூடாதென்று புதிய சட்டம் குறிப்பிடுகிறது. மேலதிக காணி நிலச் சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதலோ அல்லது இன்னொரு குத்தகைக்காரருக்கு வழங்கப்படுதலோ, கமநலப்பணிகள் ஆணையாளரது ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும். நிலச் சொந்தக்காரர்களைப் போன்று வேளாண்மை நில தொழிலாளர்களைச் சுரண்டும் ''சிறந்த கமக்காரர்களின்'' தோற்றத்தை குத்தகைக்காரருக்குரிய நில உச்சவரம்பு ஐயத்திற்கிடமின்றித் தடை செய்யக்கூடியதாயிருந்தபோதும், இவ்வேற்பாட்டின்படி மேலதிக நிலங்கள் நிலச் சொந்தக்காரர்கட்கு மீள கொடுக்கப்படுதல் என்ற சட்ட நுழைவழியால் கமக்காரர்களைப் பயன்படுத்த மீள நிலச் சொந்தக்காரர்களைக் கொண்டுவரும் தன்மையினை மேலாய்வது நன்மை பயக்கும்.

இச்சட்டம் வேலைக்களமட்டத்திலான வேளாண்மைக் கொள்கைகளின் இணைப்பு, நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வேளாண்மை உற்பத்திக் குழுக்களின் இடத்துக்கு கமநலப்பணிக்குழுக்களை உருவாக்கியது. கமநலப் பணிக்குழுக்களில் அலுவல்சார் பங்கேற்பானது, 14 உறுப்பினர்களில் 8 பேர் அலுவல்சார்பானவர்களாயிருத்தல் வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது, எனினும் 10 பேருக்குக் குறையாமல் கமக்காரர்களின் நேரடிப் பங்கேற்பாளர்கள் இடம்பெறல் வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டமையால் முன்னைய பயிர்ச்செய்கைக் குழு உறுப்புரிமையில் கமக்காரர்கள் கூடியளவில் இடம் பெற்றனர். புதிய குழுக்களிலுள்ள பெரும்பான்மையான அலுவல்சார் உறுப்பினர்கள் தொழிற்பாட்டைச் சிறப்புற நடத்துவார்களா என்பது அலசிப் பார்ப்பதற்குரிய ஒரு விடயமாகும். இதனால் ஓராண்டு பட்டுணர்வின் பின்பும் முற்றான மீளாய்வின் பின்பும் நடைமுறை ஒழுங்குகள் பற்றி ஆராய்வது பயனுடையதாகும்.

1979 இல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு நிறுவன அபிவிருத்தி, நாட்டின் முதன்மைச் செயற்றிட்டமான மகாவலி ஆற்றின் நீர் வழங்க பலநோக்க அபிவிருத்திக்காகப் பயன்படுத்தலை நடைமுறைப்படுத்தலுக்காக ''மகாவலி அபிவிருத்தி மேலாண்மை சபையை'' உருவாக்கியமையாகும். இம் மேலாண்மை சபைக்கு நிறுவனங்களை அமைப்பதற்கும், அபிவிருத்தி நடவடிக்கைகளின் இன்றியமையாத இணைப்புக்குமான பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

காணிச் சீர்திருத்தங்களின் கீழ் இழந்த நிலங்களின் இழப்புக்களின் பொருட்டு அந்நிலங்களுக்கு உடைமையானவர்களின் மேன் முறையீடுகளை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு (கா. சீ. ஆ.) தொடர்ந்தும் மீளாய்வு செய்கின்றது. 1979 இல் 1964 எக்டேயர்கள் (4853 ஏக்கர்கள்) கொண்ட நிலம் முன்னைய உடைமையாளர்களுக்குத் திரும்பவும் வழங்கப்பட்டதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களின் ஒன்று சேர்ந்த மொத்தப் பரப்பு 5219 எக்டேயர்களாக (12,896 ஏக்கர்) அல்லது தொடக்கத்தில் உடைமைகளாக்கப்பட்ட நிலங்களின் 2.3 சதவீதமாகக் காணப்பட்டது. ஆணைக்குழு 1972 சட்டத்தின் கீழ் 1979 இல்இழப்பீடாக ரூ. 440 இலட்சத்தை செலுத்தியது. இச்சட்டத்தின் கீழ் 1979 இறுதியில் மொத்தமாகச் செலுத்தப்பட்டிருந்த

UNIVERSITY OF MORATUWA LIBRARY

தொகை ரூ. 2,390 இலட்சமாகும். 1975 இன் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு கூட்டு நிலையங்களுக்கு ரூ. 690 இலட்சம் செலுத்தப்பட்டது. இவ்வாறு 65 கூட்டு நிலையங்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,590 இலட்சமாகும்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உடைமையாக்கப்பட்ட நிலங்களை, நிலமற்றவர்களுக்கு இலவசமாக வழங்கும் நோக்குடன் 1979 யூனில் காணி வழங்கல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஆண்டின் பிற்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தேயிலைக் கைத்தொழில் பற்றி ஆராய்ந்த கனடிய பன்னுட்டு அபிவிருத்தி முகவர் நிலையம் (க. ப. அ. மு.) தனது தேயிலைப் பெருந்திட்டத்தை 1979 இல் அரசிடம் ஒப்படைத்து ஏற்றுமதி வரிகளுக்குப் பதிலாக காணி வரியை ஏற்படுத்தல். குறுகிய காலத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மொத்தமாக மீளப் பயிரிடும் முறைக்குப் பதிலாக, இடையிடையே மீளப்பயிரிடுதல் தேயிலை உற்பத்திக்காக வசதிகளை உருவாக்கல். தேயிலைக் கைத்தொழிலின் நிறுவன அமைப்பை மறு சீரமைத்தல் ஆகியன அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெரும் எடுத்துரைப்புக்களாகும்.

நிறுவன அமைப்பைப் பொறுத்தவரை பலவகைப்பட்ட முகவர் நிலையங்களுக்கிடையில், மேலெழுந்த வாரியானதும், ஒரே மாதிரியானதுமான தொழிற்பாடுகள் நிலவுவரை அறிக்கை தெளிவுபடுத்தியது. இக்குறைபாடுகளை நீக்குவதற்காக, இலங்கைத் தேயிலைச்சபையின் பங்கை முற்றுமுழுதாக மதியுரை வழங்குமொன்ருகக் கட்டுப்படுத்துமாறும் பெருந்தோட்டக்கைத் தொழில் அமைச்சின் குறிப்பிட்ட சில தொழிற்பாடுகள், நடைமுறையிலுள்ள அரச நிறுவனங்களுக்கு வழங்குமாறும் தகவுரை செய்தது. குடித்தொகை அடர்த்தியாகவுள்ள மத்திய, தாழ் நிலங்களில் உண்மையானதொரு சீர்திருத்தத்தைக கருத்திற் கொண்டு தேயிலை நிலங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் ஊக்குவிப்பாக அரசதுறை நிலங்களை, அந்நிலங்களில் தொழில் செய்யும் நிலமற்ற தொழிலாளருக்கு வழங்கும்படி அறிக்கை எடுத்துரைத்தது. வரைவு அறிக்கை தற்போது அரசினுல் ஆராயப்பட்டு வருகிறது.

தெங்கைப் பொறுத்தவரையில், 1978 ஓகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சிக்கலான ஏற்றுமதி வரியமைப்புமுறை 1979 இலும் தொடர்ந்தும் ஒரு திருத்தத்துடன் முன்பு பெறப்பட்ட 85 சதத்துக்கும் (பெப்புருவரியிலிருந்து) 65 சதத்திற்கும் பதிலாக சராசரியாக காயொன்றுக்கு ஒரு ரூபாவை உற்பத்தியாளருக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நடைமுறையில் இருந்தது. வரியமைப்பை மீளாய்வு செய்த குழுவொன்று, உள்நாட்டு விலைகளைக் குறைப்பதற்கு தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட உயர் ஏற்றுமதி வரியின் காரணமாக கைத்தொழிலில் கடுமையான நீண்டகால வீழ்ச்சியொன்றைக் குறித்து எச்சரித்தது. இது தெங்குப் பயிர்ச்செய்கைக்குக் குறைந்த வருவாயையே கொடுத்தது. உற்பத்தியாளர் விலையை 1979 இல் காயொன்றுக்குக் குறைந்தது. ஒரு ரூபாயாக உயர்த்துதல் (அதன் பின் பொது வாழ்க்கைச்செலவு உயர்வுக்கேற்ப உயர்த்தும்படியும்) ஏற்றுமதிவரிகளைக் குறைப்பதன் மூலம் இவ் விலைகளை உற்பத்தியாளர் பெறுதலை உறுதிப்படுத்துவதற்காக அரசின் தலையீடு, தேக்க நிலையிலுள்ள காலமான மேயிலிருந்து செத்தெம்பர் வரையில் மிகத் தாராளமாக ஏற்றுமதிகளை அனுமதித்தல், விலைகளை உறுதிப்படுத்துவதற்காக

தேங்காயெண்ணெயைச் சேகரித்தல், நிறுவன அமைப்பு முறையை ஏற்படுத்தல் ஆகியவற்றை எடுத்துரைத்தது. அரசு இவ்வெடுத்துரைப்புக்களை ஏற்றுக் கொண்டதெனினும் ஏற்றுமதித் தீர்வைகளைக் குறைத்ததன் விளைவாக ஒரு புறமும் பருவகாலக் காரணிகள் ஒருபுறமும் சேர்ந்ததனுல் 1979 இன் பிற்பகுதியில் தெங்குவிலைகள் உயர்ச்சியடைந்தபோது, நுகர்விற்காக அரசுக் குடைமையான நிலங்களிலிருந்து நகரப்பகுதிகளுக்குத் தெங்கை ஆற்றுப்படுத்தியதன் மூலம் தெங்கு விலைகளைக் குறைப்பதற்கு அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டது. இக்கொள்கைகளில் வெளிப்படையாகவுள்ள முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

ஆண்டு தொடக்கத்துடன் வளமாக்கி உதவுதொகைகள் 50 சதவீதம் வரை வழங்கப்பட்டன. செத்தெம்பரில் அமோனியம் சல்பேற்றுக்கான உதவு தொகை 55 சதவீதமாயும், யூரியாவுக்கு 85 சதவீதமாயும், ஏனைய வளமாக்கிகளுக்கு 75 சதவீதமாயும் உயர்த்தப்பட்டன. வளமாக்கி விலைகளை மிதப்படுத்தியதன் விளைவாக 1979இன் இறுதிக்காலாண்டில் விரும்பத்தக்கவகையில் வளமாக்கிப்பயன்பாடு அதிகரித்துக் காணப்பட்டது.

1979இல் வேளாண்மைக் கொடுகடனில் மிகவும் குறிப்பிடத்தக்க பண்பாக கடன்களின் பகிர்விலேற்பட்ட மிகப்பெருமளவு வீழ்ச்சி விளங்கியது. 1979இல் வழங்கப்பட்ட வேளாண்மைக்கொடுகடன் 1973இன் பின்னர் எந்த ஆண்டிலும் வழங்கப்பட்ட கொடுகடனின் சராசரி அளவிலும் பார்க்க 40 சதவீதம் குறைவானதாகும். இதற்கான உடனடியானதும் வெளிப்படையானதுமான காரணம் யாதெனில் 1978இல் அரசின் சார்பில் மத்திய வங்கியினுல் தொழிற்படுத்தப்பட்ட 75 சதவீதக் கொடுகடன் உத்தரவாதத்தை நீக்கியமையாகும். இவ்வாறு கொடுகடன் உத்தரவாதத்தை மீளப்பெறுவதற்கான முடிவினை எடுப்பதற்கு கடந்த காலத்தில் கொடுகடன் தாராளமாக்கப்பட்டபோது குறிப்பாக 1977/78 பெரும்போகக் காலப்பகுதியில் அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் (அகிகொதி) தொழிற்பாடுகளைக் குறைத்த உயர்வீதமான தவறுகைகளே காரணமாகும். வர்த்தகவங்கிகள் தமது கடன் வழங்கல், மீளப்பெறுகை ஒட்டிய நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஊக்கமளிக்காததொன்ருக இவ் உத்தரவாதம் விளங்கியதென்பது வெளிப்படையாகும். உத்தரவாதத்தை நீக்கியதைத் தொடர்ந்து கிராமியக் கொடுகடனைப் பொறுத்தவரையில் வர்த்தகவங்கிகளின் தன்மையில் குறிப்பீடத்தக்கதொரு மாற்றம் காணப்பட்டது வங்கிகள் வேளாண்மைக் கடன்களை வழங்குவதற்கு தேவையான ஆவணங்களைப் பெறுவதில் கூடிய உன்னிப்பாகவும். முனைப்பாகவும் விளங்கின.

உண்மையில், உள்நாட்டு வேளாண்மையை விரைவாக புத்தெழுச்சி பெறச் செய்வதற்காக வேளாண்மைக் கொடுகடன் தொடர்பாக கூடிய செயல்துறைப் பயன் நாட்டமுடைய கொள்கை மேற்கொண்டமைக்குக் காரணமுண்டு. அரசின் மிகக்குறைந்த கடப்பாடுடன் கொடுகடன் உத்தரவாதத்தை தொடக்க நிலையிலாவது மீள அறிமுகப்படுத்துவது இன்றியமையாதது போல் தெரிகிறது. வேளாண்மைத்துறையில் புதிய நிறுவன சீரமைப்புக்களை மேற்கொண்டு வேளாண்மைக் கொடுகடன் விடயத்தில் மிகவும் கவனமான கண்காணிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். கிராமியத்துறையின் கடன் வழங்கலுக்காக வங்கிகள் தமது மூலவளங்களின் சதவீதப்பங்கை ஒதுக்கவேண்டுமென்று கேட்கப்படுவது விரும்பத்தக்கதாகும் மிகவும் சுறுசுறுப்பான முறையில் இவ் வேலை

யைக் கையேற்கும் நீண்டகால, குறுங்கால முதலீடுகளைக் காட்டும் ஒரு சுட்டெண்ணுக அரசினுல் மேற்கொள்ளப்பட்ட மீள்நடுகைத் திட்டங்களை வளமாக்கித் திட்டங்களையும் பயன்படுத்தின், இவற்றிற்கான மக்களின் ஈடுபாட்டை நோக்கின் 1979ஆம் ஆண்டு நன்கமைந்திருக்கவில்லை. வேளாண்மைத்துறைக்கான மொத்த வளமாக்கி வழங்கல்கள் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது ஒரு எச்சரிக்கையாகக் கொள்ளல்வேண்டும் ஏனெனில் 1980இலும், வளமாக்கி உட்பட உள்ளீடுகளின் பயன்பாட்டை உடனடியாக அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலன்றி வேளாண்மையில், பெரும் உற்பத்தியதிகரிப்பொன்றையடைவது கடினமாகும். 1979இல் தேயிலை, இறப்பர் இரண்டையும் பொறுத்தவரையில், இரண்டுக்குமான மீள்நடுகைத் திட்டங்களுக்கான ஈடுபாடு சிறந்த முறையில் காணப்பட்டது. குறைவான இலாப எல்லைகள் காணப்பட்ட நிலையிலும் அரச பெருந்தோட்டங்கள் தமது மீள்நடுகைத்திட்டங்களைத் தொடங்கின. எனினும் இறப்பரைப் பொறுத்த வரையில், மீள்நடுகைத் திட்டங்களுக்கு ஈடுபாடு காட்டுவதில் தனியார் துறையே முதன்மையானதாக விளங்கியதுடன், உதவுதொகைகளிலேற்பட்ட அதிகரிப்புக்கள், எரிபொருளுக்கான இறப்பர் மரத்தின் அதிகரித்துச் செல்லும் விலைகள் ஆகியனவே பெரும்பாலும் இதற்குக் காரணமாகும். தெங்கு மீள் நடுகையும் 1979இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

எனினும் அண்மை ஆண்டுகளில் பயிரிடமுடியாது தவிர்க்கப்பட்டிருந்த இடைவெளியை நிரப்புவதற்கும் முதுமையான பயிர்களை களைந்து தகுந்த நேரத்தில் புதிய பயிர்களை பயிரிடுவதற்கும், தேவைப்பட்ட மீளப்பயிரிடலையொட்டி மரப்பயிர்த்துறையில் ஏற்பட்டசெயலாற்றமட்டம் 1979இல் போதியதாக அமைந்திருக்கவில்லை. பழமையான முறையில் தீர்மானிக்கப்பட்ட ஆண்டு இலக்குகளில் எதுவும் அமையப்படவில்லை. முன்னைய ஆண்டறிக்கையில் மீண்டும், மீண்டும் வற்புறுத்தப்பட்டது போன்று, மரப்பயிர்த்துறையில் மீளப் பயிரிடல் உதவுதொகைகளின் மீது கணிசமான அதிகரிப்பு ஒன்று கட்டாயம் வேண்டியதொன்றாகும். உதவு தொகைகளின் அண்மைய அதிகரிப்புக்கள் சிறியனவாகக் காணப்பட்டதுடன் மிகவிரைவில், உதவுதொகைகளிலேற்பட்ட அதிகரிப்புக்களின் தாக்கத்தை விலையதிகரிப்புக்கள் குறைத்தன. மேலும், சிறு ஏற்றுமதிகள் தவிர்ந்த ஏனையன தொடர்பாக மரங்களை அழித்தபின் புதிய பயிர்கள் விளைச்சலைத் தரும்வரை 4 தொடக்கம் 6 ஆண்டுகள் வரை பயிர் வளர்ப்போன் தாங்கிக்கொள்ளவேண்டிய வருவாய் இழப்பை எந்தவொரு மீளப்பயிரிடல் உதவுதொகைகளும் கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை. அதிகரித்துச் செல்லும் உதவுதொகைகள் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தமாட்டா. ஏனெனில் மீளப்பயிரிடலுக்கான நிதியங்கள் ஏற்றுமதித்தீர்வையிலிருந்து உருவாகின்றன. மேலும், இவ்வுதவுதொகைகளை வாங்குவதில் பின்பற்றப் பட வேண்டியநடைமுறைகள் மிகவும் சிக்கலானவையாக அமைந்தன; இவைகள் மிகவும் இலகுபடுத்தக் கூடியனவாகும்.

உணவு இறக்குமதிகளைத் தாராளமாக்கியதினுல் உள்ளூரில் பயிரிடப்பட்ட சிறு உணவுப்பயிர்களின் கேள்வியும், விலைகளும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. கோதுமைமாவை உதவுதொகை விலையில் விற்கும் அரசின் கொள்கை (பாணின் விற்பனை விலையைக் கட்டுப்படுத்தலும்) உணவுப்பயிர்களுக்கான கேள்வியைக் குறைப்பதில் ஒரு பங்கெடுத்தது. தானியங்கள், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், கோழி இறைச்சி ஆகியவற்றின்

தாராளமான இறக்குமதிக்கான ''தாங்கியிருப்புத்திட்டங்களும்'' உள்ளூர் உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

அரசு சந்தையில் நுழைந்து நேரடியாக பொருட்களைக் கொள்வனவு செய்யாது நவெம்பரில் சோளம், உழுந்து, மணிச்சோளம், தட்டைப்பயறு, மஞ்சள் தோலுடனுன நிலக்கடலை, எள், செத்தல் மிளகாய் ஆகிய எட்டுப் பண்டங்களுக்கும் உற்பத்தியாளருக்கு ஆகக்குறைந்த விலையை உறுதிப் படுத்துவதற்சாக மிகக்குறைந்த விலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத் தியது. ஆகக்குறைந்த விலைகள் உற்பத்திச்செலவைவிடக் கூடியதாயினும் இவைகள் திறந்த சந்தை விலைகட்கு சற்று குறைவாக இருந்தன. அவ்வாறுயின், தட்டைப்பயறு, பாசிப்பயறு, கடலை போன்ற முக்கிய பண்டங்களை உள்ளடக்கு வதற்காக திட்டத்தை விரிவுபடுத்திற்கும் கூடிய காரணம் உண்டு.

1979 இல் சில முதன்மையான சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி யிலேற்பட்ட விரிவுக்கு, உற்பத்தியாளருக்குச் சிறந்த விலைகளைப் பெற்றுக் கொடுத்த ஏற்றுமதி தீர்வைகளை முழுமையாக அல்லது ஒரு பகுதியாக நீக் கியமையே காரணமாகும். ஏற்றுமதி அளவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட உற் பத்தியதிகரிப்புகள் குறிப்பாக கராம்பு, கோப்பி, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம் ஆகியவற்றில் தெளிவாகக் காணப்பட்டது

இது சிறு உற்பத்தியாளர்கள் விலை ஊக்குவிப்புக்குச் சார்பான முறையில் ஈடுகொடுக்கின்றுர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. நீண்ட நாள் உயிர் வாழ் பயிர்களைப் பொறுத்து உண்மையெனினும் இது, கொள்கை வகுத்தலில் அடிக்கடி புறக்கணிக்கப்படுகிறது. 1974 இலிருந்து மாற்றமின்றியிருந்த சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான புதிய பயிரிடல், மீளப் பயிரிடல் ஆகியவற்றிற்கான உதவுதொகைகள் தற்போது செலவின் ஏற்ற இறக்கங்களை மட்டுமன்றி நீண்ட பயன் தரும் காலப்பகுதியில் உற்பத்தியா ளர் வருவாயில் ஏற்பட்ட இழப்புக்களையும் கணக்கிலெடுத்து கணிசமானஎ வில் உயர்த்தப்பட்டுள்ளன.

1979இல், நாட்டின் முதன்மை அபிவிருத்தித் திட்டமான மகாவலி அபி விருத்தித்திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் சிறிதளவு முன்னேற்றம் காணப் பட்டது. விரைவுபடுத்தப்பபட்ட மகாவலித் திட்டத்தில் பெரும்பாலான செயற் றிட்டங்களின் நடைமுறைப் பயன் பற்றிய ஆராய்வுகள நிறைவு பெற்றன. அத்துடன் சிலவற்றில் நியாயமான அளவு அமைப்பு வேலைகளும் இடம்பெற் றன. உக்கிட்டிய ஓயா செயல் திட்டத்தில் அணைக்கட்டு அமைப்பு வேலைகளும் தொடங்கப்பட்ட வேளையில் மாதுறு ஓயா, கொத்மலை செயற்றிட்டங்களில் தொடக்க வேலைகள் தொடங்கபபட்டன. விக்டோறியா செயற்றிட்டத்தில் நடைமுறைப் பயன பற்றிய ஆராய்வுகளும், தொடக்க வேலைகளும் பெருமஎ வில் நிறைவேற்றப்பட்டன. ரன்தெனிகல செயற்றிட்டத்தில், நடைமுறைப் பயன் பற்றிய ஆராய்வுகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மொரகாகாந்த செயற்றிட்டத்தைப் பற்றி முடிவொன்று எடுக்கப்படவேண் டும். விரைவுபடுத்தப்பட்ட செயற்றிட்டத்தில் இடம் பெருததும், ஏற்ற முன்னுரிமையைப் பெருததுமான போவத்தன செயற்றிட்டத்தில் இதன் காரணமாக மின்னுற்பத்தி நிலைய அமைப்பில் மெதுவான முன்னேற்றமே ஏற்றதாயிருந்தது. பயிர்ச்செய்கை நோக்கங்களுக்கான அபிவிருத்தி முறை யைப் பொறுத்தவரையில் கலாவெவ பகுதியில் 1979 இறுதியில் ஏறக்குறைய

12,000 எக்டேயர்கள் கொண்ட புதிய நிலம் (எச் முறையெனக் கூறப்பட்டது) அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக 1 எக்டேயரும் (1½ ஏக்கர்) வீட்டுத்தோட்டம், வீடமைப்பு ஆகியவற்றுக்காக 1/5 ஏக்டெயரும் (½ ஏக்கர்) ஒதுக்கப்பட்டு ஏறக்குறைய 13,300 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

மொறகாகந்த செயற்றிட்டம்தவிர, விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டத்தில் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு 1979 விலைகளில் ரூ. 225,500 இலட்சமாகும். 1979 இறுதியில் ஒன்று சேர்ந்த மொத்த செலவினம் ரூ. 7,720 இலட்சமாயிருந்தது. இதில் 1979 காலப்பகுதியில் ரூ. 7,290 இலட்சம் செலவழிக்கப்பட்டது. விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.6

## விரைவுபடுத்தப்பட்ட மகாவலித் திட்டம் – செலவுகளின் மதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவுகள் | 1979க்கான திட்டமிடப்பட்ட செலவு | 1979க்கான உண்மையான செலவினம் (தற்காலிகம்) | 1979இறுதி வரையான ஒன்றுசேர்ந்த செலவினம் |
|---|---|---|---|---|
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் | 4,000 | 125 | 93 | 98 |
| 2. கொத்மலை நீர்த்தேக்கம் ... | 5,000 | 559 | 280 | 283 |
| 3. ரன்தெனிகல நீர்த்தேக்கம் | 4,000 | 55 | 23 | 25 |
| 4. மாதுறு ஓயாவும் இணைக்கும் கால்வாயும் ... | 1,700 | 64 | 78 | 99 |
| 5. உல்கிட்டிய நீர்த்தேக்கம் மினிபே அணைக்கட்டு இடைப்போக்கிலுள்ள கால்வாய் ஆகியன ('இ' முறைப்பொறியியல்) ... | 1,200 | 93 | 134 | 139 |
| 6. நீர்ப்பாசன முறை அ ... | 1,500 | 16 | 3 | 3 |
| 7. நீர்ப்பாசன முறை ஆ ... | 2,600 | 55 | 16 | 18 |
| 8. நீர்ப்பாசன முறை இ | 1,500 | 173 | 100 | 105 |
| 9. நீர்ப்பாசன முறை ஈ .. | 1,050 | 2 | 2 | 2 |
| மொத்தம் .. | 22,550 | 1,142 | 729 | 772 |

மூலம்: மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமை சில ஆண்டுகளாக வெளிப்படையாக நோக்கப்பட்டதுடன், 1979 இலும் இந்நிலைமை தொடர்ந்தது. முன்பிருந்த பெரிய செயற்றிட்டங்கள் தவிர, இவ்வபிவிருத்திக் குறைவுக்கு அமைப்பு, மேற்பார்வை, பேணுகை, உண்மையான நடைமுறைப்படுத்தல் ஆகிய பொறுப்புக்கள் மூன்று வேறுபட்ட அரச முகவர் நிலையங்களுக்கிடையில் பிரிக்கப்பட்டமையே பெரிதும் காரணமாகும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் உருவாக்கம், அமைப்பு, ஆகிய பொறுப்புக்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு கொடுக்கப்பட்டிருக்க மேற்பார்வை, பேணுதல், பழுதுபார்த்தல் ஆகியன வேளாண்மை அபிவிருத்திஆராய்ச்சி அமைச்சுக்கெனக் கருதப்பட்டன. எனினும், இம்முகவர் நிலையங்களில் எவற்றுக்கும் சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களின் உருவாக்கம் அமைப்பு ஆகியவற்றுக்கோ அல்லது பேணுகைக்கோ எதுவித நிதியும் ஒதுக்கப்படவில்லை. மாவட்ட தேர்தல் தொகுதி மட்டங்களில் பகிரப்பட்ட சில நிதியங்கள் (1979 இல் ரூ 3,500 இலட்சம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டன. ஆயினும், இத்தொகையில் பெருமளவு பள்ளிக்கூடங்கட்கும், தெருக்களுக்கும், கட்டடங்களுக்கும் அதிகளவில் செலவழிக்கப்பட்டதுடன் மிகச் சிறிய தொகையே நீர்ப்பாசனத்துக்காகச் செலவழிக்கப்பட்டது. வேளாண்மை வெளியீட்டில் குறுங்கால அதிகரிப்பொன்றை யடைவதற்கான விரைவானதும், மலிவானதுமான வழிகளில் இச்சிறிய நீர்ப்பாசன வேலைகளை விரைவில் பழைய நிலைக்குக் கொண்டு வந்து அவற்றை நல் நிலையில் வைத்திருப்பதும் ஒன்று என்பது தெளிவாயிருப்பதுடன் இதனால், இத்துறை மிகவும் கூடிய முதன்மையைப் பெறுகிறது. பல ஆண்டுகளின் பின் விளைவைத்தரும் பெரும் செயற்றிட்டங்கள் சிறிய வேலைகளுக்குக் கிடைக்கத்தக்க மூலவளங்களை இல்லாமற் செய்யலாம். எனவே சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்குப் போதியளவில் மூலவளங்களைத் தொடர்ந்து வழங்குவதன் மூலம் இதைத் தடுக்கலாம்.

**தேயிலை**

*1979* இல் தேயிலையுற்பத்தி 4 சத வீதத்தால் அதிகரித்து 2,060 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது. உற்பத்தி 7 சத வீதத்தால் அதிகரித்த உயர் நிலப் பகுதிகள் உற்பத்தி அதிகரிப்புக்குச் சான்றாயிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதே நிலப்பகுதியின் வெளியீடு 9 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. நாட்டின் தேயிலைப் பரப்பில் ஏறக்குறைய 62 சதவீதத்தைக் கொண்ட இரு பெரும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களான - மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை (மதோஅச) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (இஅபெகூ) ஆகியன ஒன்று சேர்ந்து 1,640 இலட்சம் கிலோக்களுக்கு அல்லது மொத்த உற்பத்தியின் 80 சதவீதத்துக்கு வகை கூறின. எனினும், இவற்றின் தொழிற்சாலைகளும் சிறு நில உடைமையாளர்களிடமிருந்து தேயிலை இலையைக் கொள்வனவு செய்வதால் உற்பத்தியில் இவற்றின் நேரடிப்பங்கு சிறிதளவு குறைவாயிருக்கும்.

அட்டவணை 1.7


**தேயிலை புள்ளிவிபரங்கள் — 1977 - 79**

| | கூறு | 1977 | 1978 | 1979 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப.இ.கி.கி | 208.6 | 198.9 | 206.4 |
| 1.1 உயர்நிலம் | ப.இ.கி.கி | 78.7 | 71.7 | 76.5 |
| 1.2 மத்தியநிலம் ... | ப.இ.கி.கி | 66.6 | 61.0 | 62.5 |
| 1.3 தாழ்நிலம் ... | ப.இ.கி.கி | 63.3 | 66.2 | 67.4 |
| 2. பயிரிடப்பட்ட பரப்பு ... | '000 எக்டோயர்கள் | 242 | 243 | 244 |
| 3. விளைச்சல் ... | கி.கி.உ. எக்டேயர்கள் | 1,007 | 958 | 993 |
| 4. வளமாக்கிப்பயன்பாடு ... | '000தொன்கள் | 80.1 | 115.6 | 105.4 |
| 5. மீளப்பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,242 | 1,141 | 2,035 |
| 6. விலைகள் | | | | |
| 6.1 தேறிய கொழும்பு விலை ... | கி.கிக்கு ரூபா. | 13.44 | 11.65 | 11.22 |
| 6.2 ஏற்றுமதி க.எ.பெ. | கி.கிக்கு ரூபா. | 18.84 | 33.22 | 30.51 |
| 7. உற்பத்திச்செலவு ... | கி.கிக்கு ரூபா | 7.80 | 10.50 | 12.70 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப.இ.கி.கி | 185.8 | 192.7 | 187.5 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ.ப.இ. | 3,502.5 | 6,400.9 | 5,722.2 |
| | சி.எ.உ.ப.இ | 336 | 327 | 284 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி,(ஆ) ... | | 13.5 | 10.9 | 7.9 |

(அ) தற்காலிகம்
(ஆ) பயிர்ச்செய்கையிலும் பதனிடலிலும் மட்டும்

மூலம்: இலங்கை மத்தி வங்கி

## முதன்மை வேளாண்மை பயிர்களின் உற்பத்தி




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டில் தேயிலைத்துறைக்கு வழங்கப்பட்ட வளமாக்கி, கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பான 44 சத வீதங்களுக்கு மாருக ஏறத்தாழ 9 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் அவற்றின் வளமாக்கிப் பயன்பாட்டை எல்லையளவால் அதிகரித்திருந்தமையால் வளமாக்கிப் பயன்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி தனியாருக்குச் சொந்தமான காணிகளில் ஏற்பட்டிருக்கக்கூடும். தேயிலை வளமாக்கி உதவுதொகை அதிகரிக்கப்பட்டபோதும் இத்தன்மை ஏற்பட்டமைக்கு 1979 ஆம் ஆண்டில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியின் விளைவினுல் குறைந்தளவு வளமாக்கிப் பயன்பாடு ஏற்பட்டமையே காரணம்போல் தோன்றுகின்றது. குறிப்பாகத் தாழ் நிலப் பரப்பில் வானிலை நிலைமைகளும், வளமாக்கிப் பங்கீடுகளில் நிலவிய சிக்கல்களும் கூட வளமாக்கிப் பயன்பாட்டை மந்தமாக்கி இருக்கலாம். இருந்தபோதிலும், ஒரு ஏக்கருக்கான சராசரி விளைவு கடந்த ஆண்டில் ஏற்பட்ட ஏறத்தாழ 7 சத வீதத்துக்கு மாருக ஏறத்தாழ 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது பெரும்பாலும், வேளாண்மையில் கையாளப்பட்ட சிறந்த நடைமுறைகளாலும் 1978 இல் பயன்படுத்தப்பட்ட உயர்ந்த வளமாக்கிப் பயன்பாட்டின் காலம் தாழ்த்திய விளைவிலும் ஏற்பட்டிருக்கலாம்.

அண்மை ஆண்டுகளாக, தேயிலை பயிரிடப்பட்டிருந்த நிலப்பரப்பு ஏறக்குறைய நிலையாகவே இருந்திருக்கிறது. ஏனெனில் பரப்பளவில் பெறப்பட்ட பெறுகைகள் கிராமிய விரிவாக்கத்திற்கும், ஏனைய அபிவிருத்திச் செயற்றிட்டத்துக்கும் மாற்றப்பட்ட நிலங்களினுல் ஏறக்குறைய எதிரீடு செய்யப்பட்டன. நிலப்பயன்பாட்டு நோக்கில், தேயிலைப் பயிர்ச்செய்கை மிக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பினும் தேசிய நோக்கில், இத்தகைய செயற்றிட்டங்கள் அமைவு பெறுவதற்காக தேயிலை நிலங்களைத் தவிர்ப்பது கூடியளவு நன்மையை அளிக்கக்கூடும்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு (சிறப்பாக தாழ் நிலப் பகுதிகள்) ஆகிய நிருவாக மாவட்டங்களில் எல்லாவகை நிலங்களிலும் தேயிலை மீள் நடுகைக்கான ஒரு ஏக்கருக்கான உதவு தொகை ரூ. 6,000 இலிருந்து ரூ. 8,000 இற்கும் பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை (சிறப்பாக உயர் நிலமும், மத்திய நிலமும்) யிலும் ஒரு ஏக்கருக்கு ரூ. 10,000 இற்கும் உயர்த்தப்பட்டது. பழைய இறப்பர் நிலங்களில் உயர் விளைச்சல் தரும் தேயிலை இனப் பயிரிடலுக்கு ஒரு ஏக்கருக்கான உதவுதொகை ரூ. 4,000 இலிருந்து ரூ 4,750 இற்கு உயர்த்தப்பட்டதுடன் புதிய நிலங்களில் பயிரிடலுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 3,500 இலிருந்து ரூ. 4,750 ஆக அதிகரிக்கப்பட்டது. கடந்த ஆண்டின் மிகக் குறைந்த செயலாற்றத்தைக்காட்டிலும், 1979 இல் தேயிலை மீள்நடுகை வீதம் குறிப்பிடத்தக்களவு திருத்தத்தைக் காட்டியது. ஆயினும், மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு இன்னும் ஆண்டு இலக்கிலும் பார்க்க மிகப் பின்னடைந்ததாகவே இருக்கின்றது கடந்த ஆண்டு வரை உயர்ந்த விளைவைத்தரும் சிறந்த இனத் தேயிலையின் கீழ் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்தப்பரப்பு 33,037 எக்டேயர்களாகும். (81,601 ஏக்கர்கள்) இது, மொத்தப் பரப்பளவில் ஏறத்தாழ 14 சத வீதமாக இருந்தது. தேயிலை மீள் நடுகைக்கான ஊக்குவிப்புக்கள் பெருமளவிற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

மீள்நடுகை உதவு தொகைகளை கணிப்பிடும்போது, மீள் நடுகையை மேற்கொள்ளுமிடத்து ஏற்படும் உண்மையான செலவுகள் பற்றிய முறையான ஆய்வு விளைச்சல்தரும் 5 ஆண்டுகளிலும் இழக்கப்பட்ட வருவாய் ஆகியவற்றில் குறைந்தளவு கவனமே செலுத்தப்பட்டதுபோல் தோன்றுகின்றது. உற்பத்திச் செலவுகளில் கணிசமானதொரு குறைப்பை இவ் உயர்விளைச்சல்தரும் பயிரினங்கள் ஏற்படுத்துமாதலின் தேயிலைக் கைத்தொழிலின் நீண்டகால நலன்கட்கு வெற்றிகரமானதொரு மீள்நடுகை நிகழ்ச்சித்திட்டம் மிகவும் இன்றியமையாதது. இது, கடுமையானதொரு பன்னாட்டுச் சந்தையை எதிர்நோக்குகின்ற ஒரு கைத் தொழிலிற்கு மிகவும் வேண்டியதொன்றே. அத்துடன் உயர்ந்த விளைவிற்கான பயிர்ச்செய்கைப் பொருட்களைத் தேவையான அளவிற்குக் கொண்டிருப்பதிலும் குறைந்தளவு கவனமே செலுத்தப்பட்டதுபோல் தோன்றுகின்றது. இவை தொடர்பாக, விரைவில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

நிருவாகம், முகாமை ஆகியவற்றை யொட்டி நோக்கும்போது இவ்வாண்டில் தேயிலைப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் உறுதியான நிலைமைகள் நிலவின. 1972 இன் காணிச்சீர்திருத்தங்களை அடுத்து அடிக்கடி ஏற்பட்ட நிறுவன மாற்றங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய பெரும் அரசதுறை அமைப்புக்களில் ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளது ஆனல் 1978 இல் மீளமைப்பு முடிவுற்ற நிலையில் 1979 இல் முகாமையிலும், உற்பத்திப் பெருக்கத்திலும், கவனம் செலுத்தத்தக்க சூழ்நிலை உருவாகியது. இதன் விளைவாக, குறிப்பாக ஆண்டின் தொடக்கப்பகுதியில் மிகப் பெருமளவான திரவத்தன்மையும், அதுபோல் இலாபத்தில் ஏற்பட்ட மிகச் சுருக்கத்தன்மையும் இருந்தமைக்கு மாறாக வெளியீட்டில் 12 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்யத்தக்கதாக இருந்தது.

தேயிலை விலைகள் 1979 இல் வீழ்ச்சியுற்றன. சராசரி தேறிய (வரிகளின்) கொழும்பு ஏலவிலை 4 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. இலங்கைத் தேயிலையின் இலண்டன் ஏல விலைகள் 9 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றன. சராசரி ஏற்றுமதி (க. ஏ. பெ.) விலைகள் 8 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றன. அதே நேரம் தேயிலைத் தோட்டங்களின் முன்னைய சராசரி உற்பத்திச் செலவுகள் 21 சத வீதங்களால் உயர்ந்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. அரசின் தூண்டுதலால் ஏற்பட்ட கூலி அதிகரிப்பு மட்டும் உற்பத்திச் செலவை 12 சத வீதத்தால் உயர்த்தியது. இப்போக்குகள் அரச உடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களின் திரவத் தன்மையில் பெருந்தட்டுப்பாட்டை ஏற்படுத்தின. எனினும், வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களினல் தடையின்றித் தமது அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து நடத்தக்கூடியதாயிருந்தது தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் விதந்துரைக்கப்பட்ட மரபுவழி நடைமுறைகளையும், புதிய முதலீடுகளையும் மிக வெளிப்படையாகவே புறக்கணித்தர். இதன் விளைவாக இவ்வாண்டின் தொடக்கப்பகுதியில் உற்பத்தி சென்ற ஆண்டின வீழ்ச்சியுற்ற மட்டத்திலும் பார்க்க மிகக்குறைந்திருந்தது. இதன்காரணமாக 1979 யூலையில் வரியில் ஒரு கீழ் நோக்கிய திருத்தத்தை அரசு மேற்கொள்ளவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாகியது. அதன்பின் உற்பத்தி அதிகரித்துள்ளதெனினும் இந்தச் சீராக்கங்கள் நவெம்பரில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட எடுத்துரைப்புக்கள் வாயிலாக கைத்தொழிலை மீட்சிபெறச்செய்வதற்கும் மேலும் சலுகைகளைமேற்கொள்வதற்கும் போதுமானதாக இல்லைபோல் தோன்றுகின்றது. எனினும், ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் ஒவ்வொரு ரூபாவிற்கும் 48 சதத்தைக் இக்கைத் தொழில் தொடர்ந்தும் வரியிறுக்க வேண்டியிருந்ததினல் (ஏற்றுமதித் தீர்

வையை அளவிடவும் ஏற்றுமதிப் பெறுமான விகிதவரியும் மாத்திரம்) தேயிலைக் கைத்தொழிலின் சிக்கல்கள் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்தன. இதன் காரணமாக இலங்கையின் உயர்ந்த வரிவிதிப்பிற்குட்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்த வேலையில் தொடர்ந்தும் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. நடைமுறை உற்பத்திச் செலவும் வரிவிதிப்பும் இத்தகைய மட்டத்தில் இருப்பதனால் தேவையான மிகையை உருவாக்கமுடியாத நிலையில், இக்கைத்தொழில் உள்ளதுபோல் தோன்றுகின்றது.

தொழிலாளரின் கடுமையான பற்றாக்குறை. குறிப்பாக கடந்த காலத்தில் இந்திய தொழிலாளரின் குடிப்பெயர்ச்சியின் ஒன்றிணைந்த விளைவு உயர்நிலப் பகுதிகளிலேயே பெரிதும் உணரப்பட்டது. இது 1979 இல் சிறிதளவு குறைந்துள்ளது இத்தகைய நிலை உருவானமைக்கு கூலி உயர்வு காரணமாக பெருமளவு கிராமியத்தொழிலாளர்கள் கிடைக்கப்பெற்றமையும் அத்துடன் குடிபெயரும் ஆட்களின் எண்ணிக்கை சிறிது வீழ்ச்சியுற்றமையும். பற்றாக்குறை நிலவிய பகுதிகளுக்கு மிகை நிலையிலுள்ள தொழிலாளர் பெயர்ந்து சென்றமையும் காரணங்களாக அமையலாம். ஆனால் இது, நிலையான தன்மையுடையதல்ல. எளிதான சீர்திருத்தங்கள் மூலம் தொழிலில் ஏற்படக் கூடிய உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி ஆய்வு செய்தவற்கு உரிய காலம் இதுவாகும். இத்தகைய நிலை உருவாகினல் தான் உலக சந்தையில் இலங்கையின் போட்டித்தன்மையைப் பாதிக்கும் அளவிற்கு தொழிலில் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும். தற்போது பயிர்ச்செய்கைப் பண்புகளில் மட்டும் கவனம் செலுத்தப்படும் ஆய்வுப் பயிர்ச்செய்கை, கொழுந்து பறித்தல், பதனிடல், பொதியிடல், ஏற்றுமதி செய்தல் ஆகிய அணைத்தையும் கொண்ட கைத்தொழிலின் எல்லாத் தன்மைகளையும் உள்ளடக்கும் முறையில் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் செயலாற்றம் திருந்தியுள்ளபோதும், இவற்றின் முழு உள்ளார்ந்த ஆற்றல் மட்டம், ஏற்கனவே பெறப்பட்ட அளவிலும் பார்க்க மிக அதிகமாக இருக்கக்கூடும் என்பதனைக் குறிப்பிடலாம். முன்னேற்றமடைந்த முகாமை, நடைமுறைகள் கூடியளவு தாக்கம் நிறைந்த முகாமைப்பன்முகப்படுத்தல், தொழிற்பாடுகளில் வெளித்தலையீடுகளை நீக்குதல் ஆகியன, இந்தக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது மட்டுமன்றி வீண்விரயம், இழப்புக்கள் ஆகியவற்றைக் களைவதுடன், இலாப அதிகரிப்புக்களையும் இயலச் செய்யும். தோட்டங்களிலிருந்து, தயாரிக்கப்பட்ட தேயிலைகள் சிறந்த முறையில் திட்டமிட்டுக் களவாடப்பட்டு உள்ளூர் வரிகள் செலுத்தப்படாமலேயே இறுதியில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பொதுவான வர்த்தக நோக்கில், தேசிய உற்பத்தியில் இக்களவுகள் 10 - 15 சத வீதங்களுக்கும் கூடுதலாக இருக்கும். சரியான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டாலன்றி இந்நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடும்.

தேயிலைக் கைத்தொழிலின் விருத்தியின் பொருட்டு சிறந்த கவனம் எடுக்கப்பட வேண்டிய இன்னெருபகுதி தேயிலைச் சிறு உடைமையாகும். இது பெருமளவிற்கு தாழ்நில, மத்திய நிலப்பரப்புக்களையே உள்ளடக்குகின்றது. சிறுநில உடமையாளர்கள் நியாயமான மிகக்குறைந்த விலையைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக 1978 ஒத்தோபரில் அறிமுகம் செய்யப்பட்ட உத்தரவாத

விலைத்திட்டத்தின் கீழான மிகக்குறைந்த விலைகள் பலதடவைகளில் மேல் நோக்கித் திருத்தப்பட்டதுடன் 1979 நவெம்பர் 1 இல் அறிமுகப்படுத்தப்பட்ட விலை உதவித் திட்டத்தின் மூலம் அகற்றப்பட்டது.

கொழுந்து இலைச் சேகரிப்பாளர்களினால் உருவாக்கப்பட்ட சிக்கல்களின் போக்கில் பயன்மிக்க இத்திட்டங்கள் கேள்விக்குரிய ஒன்றாகின. இவர்கள் சிறு உடைமையாளர்களிடமிருந்து தேயிலை இலைகளைச் சேகரிப்பதில் நடைமுறைத் தனியுரிமை கொண்டவர்களாகவும் சிறுபயிர்ச் செய்கையாளருக்கான உத்தர வாத விலையை மறுப்பதில் தமது பலத்தைப் பயன்படுத்துவதில் விருப் புடையவர்களாகவும் இருக்கின்றனர். இதனால் சிறு உடைமை உற்பத்தியா ளர் சங்கங்களின் தோற்றத்திற்கு, இது சிறிய தேயிலை நில உடமையாளர் அபிவிருத்தி மேலாண்மை சபை (சி தே நி உ அ மே) உதவித் திட்டங்களை வைத்திருப்பது விரும்பத்தக்கதுபோல் தோன்றுகின்றது. (சி தே நி உ அ மே) இச்சபையின் பொறுப்பு சிறந்த விரிவாக்கம். வளமாக்கி வழங்கல் பயிர்ப் பொருட்கள் ஆகிவற்றை வழங்குவதற்கும் விரிவுபடுத்தப்பட முடியும். தற் பொழுது இதன் நடவடிக்கைகள் ஒழுங்கான நிதிவளம் இல்லாமையினால் தடைப்பட்டிருக்கின்றது. தேயிலைச்சபையினால் கிடைக்கும் நிதியத்தை தற் பொழுது பயன்படுத்துவதில் உள்ளதன்விருப்புரிமையும், ஒழுங்கற்ற இடை வெளிகளும் வேலைகளின் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள் வதில் உறுதியற்ற தன்மையையும், தடையினையும் ஏற்படுத்தின. இதனால் சிறு நில உடைமையாளர்களின் உற்பத்தியின் மொத்தப் பங்கின்படி தேயிலை வரி யில் ஒரு குறிப்பிட்ட சதவீதம், வேலையின் பொருட்டுத்திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் தடங்கலற்ற தொழிற்பாட்டிற்கு ஒழுங்கான அடிப் படை வசதிகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக சி தே நி உ அ மே சபைக்கு மேலாண்மை வழங்கப்பட்டது.

### இறப்பர்

1979இல் இறப்பர் உற்பத்தி 1,530 இலட்சம் கிலோக்களாக இருக்கும் என்று தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. 1978இன் உற்பத்தியுடன் ஒப்பிடு கையில் இது எல்லையளவான வீழ்ச்சியைக்காட்டுகின்றது கடந்த ஆண்டில் அடையப்பட்ட 7 சதவீத அதிகரிப்பு உறுதியான விலைகளிலிருந்தும் எழும் இறப்பருக்கான மிகச் சாதகமான வாய்ப்புக்கள் ஆகியவற்றுடன் நோக்கும் போது மிகவும் குறைந்த செயலாற்றமாகும். செத்தெம்பரில் செனிவாவில் கைச்சாத்திடப்பட்ட பன்னாட்டுத் தாங்கிருப்பு உடன்படிக்கையுடன் உறுதி யான ஒரு காலகட்டத்தை உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்க முடியும்.

1979இல் இறப்பர் பயிர்ச்செய்கையின் கீழ் உள்ள பரப்பு எல்லையளவான அதிகரிப்பைக்காட்டியது. எனினும் ஏக்கருக்கான சராசரி விளைவு எல்லையள வான வீழ்ச்சியைக்காட்டியது. இதற்கு புதிய உயர் விளைவைத்தரும் இறப்பர் மரவகைகள் மிகவிரைவாக வீழ்ச்சியடைந்திருந்தமையையும் குறிப்பிடலா மெனினும் சாதகமற்ற வானிலை நிலைமைகளைத் தொடர்ந்து இவ்வாண்டில் பால் எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையினாலேயே இது பெரும் பாலும் ஏற்பட்டிருக்கலாம் மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரசபெருந் தோட்டக்கூட்டுத்தாபனம் ஆகியன இலங்கையின் இறப்பர் உற்பத்திப்பரப்பில் 25 சதவீதங்களுக்கு வகை கூறியதுடன், நாட்டின் இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 30 சதவீதங்களுக்கும் வகை கூறின. இதனால் தனியார் தோட்டங்கள் குறிப்பாக சிறு உடைமையாளர் இறப்பர் நிலத்தில் 75 சதவீதத்

திற்கு வகை கூறியதுடன் வெளியீட்டில் 70 சதவீதத்தையும் உற்பத்தி செய்தனர். இதனுல் தேயிலேயை விட உற்பத்தி அதிகரிப்பிலான கொள்கைகளின் குறிக்கோள் மிகத் தொகையான இறப்பர் உற்பத்திக்குப் பொறுப்பாக இருக்கும் தனியார்துறையின் இலக்குத் தொகுதிக்கு உண்மையில் துணைநிற்கும்.

**அட்டவணை 1.8**

**இறப்பர் புள்ளி விபரங்கள் 1977-1978**

| விடயம் | | கூறு | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ... | ப. இ. கிலோ கிராம்கள் | 146 | 156 | 153 |
| 2. பரப்பு | | | | | |
| 2.1 பயிர் செய்கைக்குட்பட்ட | ... | 000 எக்டேயர்கள் | 226.7 | 226.4 | 226.7 |
| 2.2 பால் வெட்டுதற்குட்பட்ட | ... | ,, | 188.8 | 184.8 | 186.6 |
| 3. சராசரி விளைச்சல் | ... | எக்டேயர்க்கு கி.கி | 773 | 845 | 837 |
| 4. வளமாக்கிப்பயன்பாடு | ... | தொன்களில் | 12.4 | 21.0 | 23.5 |
| 5. மீளப் பயிரிடுகை | ... | எக்டேயர்கள் | 2617 | 3226 | 4168 |
| 6. உற்பத்திச் செலவு | ... | கி.கி.க்கு ரூபா | 3.74 | 4.85 | 6.86 (இ) |
| 7. சராசரி விலே | ... | ,, | 4.51 | 6.92 | 9.15 |
| 6.1 கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 | ... | ,, | 6.85 | 14.90 | 19.44 |
| 6.2 ஏற்றுமதி க. வ. பெ. | ... | ப. இ. கிலோக்கள் | 135.8 | 138.0 | 128.2 |
| 8. ஏற்றுமதிகள் | ... | ப. இ. கிலோக்கள் | 6.8 | 9.1 | 10.6 |
| 9. உள்நாட்டு நுகர்ச்சி | ... | ரூ. ப. இலட்சம் | 930.6 | 2020.6 | 2491.4 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ... | சி.எ.உ. ப. இ. | 93 | 103 | 124 |
| 11. மொ. தே. உற்பத்தி% கூட்டப்பட்ட பெறுமதி | ... | சதவீதம் | 2.7 | 2.9 | 4.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்

(ஆ) உற்பத்தி செய்தலிலும் ப தனிடலிலும்

(இ) உற்பத்திச் செலவின சாரசரிக் கணிப்பீடு – அரசதுறையின் அரசதுறைப் பொருந்தோட்டங்கள் "கி.கி. ஒன்றிற்கு ரூ. 11.10 தனியார்துறைப் பொருந்தோட்டங்க்ள் கி.கி. ஒன்றிக்கு ரூ. 5

இவ்வாண்டில் மீளப்பயிரிடப்பட்ட பரப்பளவு 29 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. கடந்த ஆண்டின் 379 எக்டேயர்களுக்கெதிராக இவ்வாண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பு 583 எக்டேயர்களாக இருந்தது. 1978 நவெம்பரில் அறிவிக்கப்பட்ட மீள்நடுகை உதவுதொகை அதிகரிப்புடன் இணைந்த சிறந்த விலேகள் இவ்வதிகரிப்பிற்கான முதன்மை காரணமாக இருந்தன. மீள்நடுகையின் எண்ணிக்கை ஆண்டிற்கான அலுவல்சார் அடைவு நிலேயான 6,000 எக்டெயார்களுக்கு (15,000 ஏக்கர்) இன்னும் மிகக்கீழேயே இருக்கின்றது. மீளப்பயிரிடப்பட்டிருக்க வேண்டிய கடந்த கால நிலுவைகளேயும் சேர்த்துக் கணிக்கும்பொழுது ஆகக்குறைந்தது ஆண்டிற்கு 8,000 எக்டெயார்களாவது (20,000 ஏக்கர்கள்) மீளப்பயிரிடல் வேண்டும்.

1979இல் மீளப்பயிரிடல் உதவுதொகை இரண்டுமுறை மீளமைவு செய்யப்பட்டது தனியார்துறைத் தோட்டங்களுக்காகவும், சிறு உடமையாளர்களுக்குமாக ஒரு எக்டேயருக்கான மீள்நடுகை உதவுதொகை செத்தம்பரில் ரூ. 9,880 (ஏக்கருக்கு ரூ. 4,00) இலிருந்து ரூ 12,350விற்கு உயர்ந்ததுடன் (ஏக்கருக்கு ரூ 5,000) நவெம்பரில் இது மீண்டும் ஒரு எக்டேயருக்கு ரூ. 16,056 (ஏக்கருக்கு ரூ. 6,500/-) இற்கு உயர்ந்தது. எனினும் முன்னர் குறிப்பிட்ட காரணங்களுக்காக இது இன்னமும் போதியனவாக இல்லேப் போல் தோன்றுகிறது. மீளப்பயிரிடலுக்கான நடைமுறைச் செலவுகள் எக்டேயரொன்றுக்கு ரூ. 21,000 இலிருந்து ரூ. 25,000 வரையில் (ஏக்கரொன்றுக்கு ரூ. 8,500

இலிருந்து ரூ. 10,000 வரை) காணப்படுகின்றன. மீளப்பயிரிடல் இலக்குகளை அடைவதற்கு மீளப்பயிரிடல் உதவு தொகைகளின் அளவு பற்றிய ஆண்டு மீளாய்வு (அல்லது அடிக்கடி) தேவையானதாகக் காணப்படுகிறது.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

1979இறுதியில் மீளப்பயிரிடப்பட்ட ஒன்றுசேர்ந்த நிலப்பரப்பு, மொத்த பதிவு செய்யப்பட்ட இறப்பர் நிலங்களில் 144,514 எக்டேயர்களுக்கு அல்லது 64 சதவீதத்துக்கு வகை கூறுகிறது. தேயிலையைவிட இது உயர்வான நிலைமை யாகக் காணப்பட்டபோதும், இறப்பர் மரங்கள் 30 இலிருந்து 33 ஆண்டுகளில் முற்றாகப்பயன் தராமலிருப்பது உண்மையாகும். ஆயின் தேயிலை மரங்கள் நீண்டகாலத்துக்கு பயனளிக்கக்கூடியனவாயிருக்கும். உதவுதொகைகளைப் பெறுவதிலுள்ள சில கட்டுப்பாடான நிலைமைகள் பயிர் வளர்ப்போரை ஊக்குவிக்காதபோது, தொடக்க வேலைகளை கையேற்பதற்கான நிதியைச் சிலர் பெற முடியவில்லையெனத் தெரிகிறது. பொறுப்பானவர்களின் நோக்கத்தில், கட்டுப்பாடு ஒன்றிலிருந்து, கைத்தொழிலின் சாதகமான ஊக்குவிப்புக்கான மாற்றமொன்று இடம்பெற வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

இறப்பருக்கான வளமாக்கி வழங்கல்கள் 1979இல் 12 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் பயன்பாடு விரும்பத்தக்கமட்டத்திலும் பார்க்க மிகவும் குறைவாகவேயுள்ளது. முதன்மையான பெருந்தோட்டங்களில் வளமாக்கிப் பயன்பாடு திருப்திகரமாயிருந்தபோதிலும், சிறுநில உடைமைகளைப் பொறுத்தவரை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளினால் இயற்கை இறப்பருக்கான எதிர்கால வாய்ப்புக்கள் ஒருபோதும் சிறந்ததாகக் காணப்படவில்லை. பெற்றோல் இரசாயனக் கைத்தொழிலின் உற்பத்தியான போட்டியுடைய செயற்கை இறப்பர்களின் விலைகள் உயர்வதுடன் எதிர்காலத்தில் போட்டியற்றதாக அமையும். செத்தெம்பரில் பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கையொன்று செனிவாவில் கைச்சாத்திடப்பட்டமையும் இயற்கை இறப்பருக்கான வருங்கால நிலைமையில் ஒரு முன்னேற்றத்தைக் காட்டியது. இவ்வாறாக பெரும் உலகம் முழுவதிலுமான மந்தமொன்றைத் தவிர்த்து எதிர்காலம் நன்கமைந்ததாகக் காணப்பட்டதுடன் 1980இல் இயற்கை இறப்பருக்கு மிகச்சிறந்த விலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த அபிவிருத்திகளை மனதிற் கொண்டு நோக்கும்போது 1979இல் இறப்பர் கைத்தொழிலின் செயலாற்றம் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. 1980இல் உற்பத்தியானது எல்லா விதத்திலும் 1979இலும் பார்க்கக் குறைவாயிருக்கும். இதற்கு நீண்டகாலம் மூப்படைந்த மரங்களில் உற்பத்தி இல்லாமற் போனதே காரணமாகும். இவ்வாறு இறப்பர் கைத்தொழிலின் சிறந்த எதிர்காலத்துக்கான வழிவகை மீளப்பயிரிடல் வீதத்தை அதிகரிப்பதிலும், குறுகிய காலப்பகுதியில் கூடிய விளைச்சலை ஏற்படுத்தக்கூடிய புதிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலுமே காணப்படுகிறது. நடைமுறையிலுள்ள மீளப்பயிரிடல் வீதத்தை இருமடங்காக்குதலும் கூடுதலாக அமையமாட்டாது.

## தெங்கு

1979இன் தெங்கு உற்பத்தி 23,930 காய்களாக மதிப்பிடப்பட்டதுடன், கடந்த ஆண்டினைவிட 8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினையும் பிரதி பலித்தது. இது 1977ஆம் ஆண்டின் ஓரளவு அதிகரிப்பிலும் பார்க்க, கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 21 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடப்படுகிறது. எவ்வாறாயினும், உற்பத்தியானது எழுபதுகளின் தொடக்கத்தில் அடையப் பெற்ற25,000 காய்களுக்கு மேலான சராசரி உற்பத்தியிலும் பார்க்க தொடர்ந் தும் குறைவடைந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**அட்டவணை 1.9**

**தெங்குப் புள்ளிவிபரங்கள் 1977—1979**

| விடயம் | கூறு | 1977 | 1978 | 1979 இ |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (அ) ... | ப.இ. காய்களில் | 1 821 | 2,208 | 2,393 |
| 1·1 தங்காய் துருவல் ... | ,. (ஆ) | 206 | 283 | 272 |
| 1.2 தேங்காய் எண்ணெய் ... | ,, (ஆ) | 393 | 641 | 803 |
| 1.3 உலர்த்திய தேங்காய் (இ) ... | ,, (ஆ) | 1 | 5 | 5 |
| 1,4 தேங்காயின் உள்நாட்டு நுகர்வு ... | ,, (ஆ) | 1,257 | 1,278 | 1,302 |
| 2. சராசரி விலை | | | | |
| 2,1 கொழும்பு ... | காய்க்கு/ரூ. | 0.92 | 0.85 | 1.13 |
| 2.2 ஏற்றுமதி க. எ.பெ. ... | ,, | 1.19 | 1.85 | 2.45 |
| 3. வளமாக்கிய பயன்பாடு ... | '00 தொன்களில் | 29.1 | 42.6 | 49.7 |
| 4. உற்பத்திச் செலவு (ஆ) ... | ,, | 0.21 | 0.33 | 0.44 |
| 5. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப.இ ரூபாய்களில் | 496 | 1,271 | 1,699 |
| | (ப.இ. சி. எ. .உ) | (47) | (65) | (84) |
| 5.1 உள்ளீட்டு உற்பத்திகள் ... | ,, | 335 | 972 | 1,298 |
| | | (32) | (50) | (64) |
| 5.2 ஏனைய உற்பத்திகள் ... | ,, | 161 | 299 | 401 |
| | | (15) | (15) | (20) |
| 6. மொ.தே.உ.(நிலையான விலைகளில்) விகிதமாக கூட்டப்பட்டபெறுமானம் ... | சதவீதம் | 5,4 | 5.2 | 4.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மதிப்பீடு

(ஆ) காய்க்கு சமமாக மாற்றப்பட்டுள்ளது – 1 மெற். தொன் தேங்காய்துருவல் = 6800 காய்கள்
சி. தற்காலிகம் – 1 மெற். தொன் எண்ணெய் = 8000 காய்கள்
– 1 மெற். தொன்கொப்பரா = 4925 காய்கள்

(இ) ஏற்றுமதிக்கு மாத்திரம். இருப்பு மாற்றங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

(ஈ) உற்பத்தி செய்தலும் பதனிடலும்

முன்னைய ஆண்டினைப் போன்று 1979 இல் சாதகமான காலநிலை நிலைமை களும், அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடுமே உற்பத்தி வளர்ச்சிக்கு பெரிதும் காரணிகளாக விளங்கின. முன்னைய ஆண்டில் 46 சதவீதமாக விளங்கிய வள மாக்கிப் பயன்பாட்டின் அதிகரிப்பு 1979இல் ஏறக்குறைய 20 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், தற்போதைய வளமாக்கிப் பயன்பாடு விதந் துரைக்கப்பட்ட அளவிலும் குறைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு ஆண்டில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நாடு வரட்சி நிலைமைகளால் பாதிக்கப்பட்டிருந்தமை ஒரு காரணமாகும். ஆண்டின் கடைசிக் காலாண்டில் தெங்கு வளரும் முதன்மை பகுதிகளில் பெறப்பட்ட மழை வீழ்ச்சியுடன் வள மாக்கிப் பயன்பாடும் மிக அதிகரித்துக் காணப்பட்டது. வளமாக்கிகள், குறிப் பாக யூரியாவுக்கான உதவு தொகை அதிகரிக்கப்பட்டமை, செத்தெம்பர் தொடங்கி உலக சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் உற்பத்தியாள ரைப் பாதிக்காதவாறு அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு கடந்த ஏப் பிறலில் நடைமுறைக்கு வந்த, தெங்கு வளமாக்கிக்கான சிறப்பான கொடு

கடன் திட்டத்தினால் உற்பத்தியாளர்கள் மேலும் பயன்பெற்றார்கள். இத்திட்டம் குறைந்த வட்டி வீதத்தில் (9 சதவீதம்) 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடியதாக 2 ஆண்டுச்சலுகைக் காலத்தையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்றவர்களுக்கும் கடன்கள் கிடைத்தன.

1979இல் மீள்நடுகை, கீழ்நடுகை ஆகியவற்றின்கீழும் புதிதாக நடுகை செய்யப்பட்ட நிலம் ஆகியவற்றின் மொத்தப் பரப்புக்கள் முறையே 1,727எக்டேயர்கள்(4,266 ஏக்கர்கள்), 1,215 எக்டேயர்கள்(3,001 ஏக்கர்கள்) ஆக விளங்கியதுடன் ஆண்டுக்கான எதிர்பார்ப்பு எல்லையை விஞ்சியும் காணப்பட்டன. ஊழியத்திற்கான அதிகரித்த செலவினத்தைக் கருத்திற்கொண்டு, நவெம்பரில் புதிய நடுகை, மீள் நடுகை என்பவற்றுக்கான உதவுதொகைகள் அதிகரிக்கப்பட்டன. புதிய நடுகைக்கான உதவுதொகை எக்டேயரிற்கு ரூ. 5,434(ஏக்கரிற்கு ரூ. 2,200) இலிருந்து எக்டேயரிற்கு ரூ. 6,793 (ஏக்கரிற்கு ரூ 2,750) ஆகவும், மீள்நடுகைக்கான உதவு தொகை எக்டேயரிற்கு ரூ. 4,446 (ஏக்கரிற்கு ரூ. 1,800) இலிருந்து எக்டேயரிற்கு ரூ. 5,558 (ஏக்கரிற்கு ரூ. 2,256) ஆகவும் உயர்த்தப்பட்டது.

வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கைகளைக் கொண்டு நோக்கின், 1979 இல் தென்னை நிலங்களில் நடைபெற்ற பல்லின பயிர்ச்செய்கை மட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்து காணப்பட்டிருந்தது. அத்தோடு பல்லின பயிர்ச் செய்கைக்கான உதவு தொகைகளும் நவெம்பரில் அதிகரிக்கப்பட்டது. இவ்வுதவு தொகைகள் தெங்குப் பயிர்ச் செய்கைகளில் காணப்படும் மரபு அடிப்படையான தன்மைகளில் மாற்றங்களை வேண்டும் இடத்து எதிரீடு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவைகளேயாகும். ஆயினும், இத்திட்டம் பயன்மிக்கதாய் அமைய உதவுதொகைகளை நிருவகிக்கும் தெங்கு பயிர்ச் செய்கைச் சபைக்கும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சுக்குமிடையில் இணைப்பு இருப்பது இன்றியமையாததாகும்.

தேங்காய் துருவல் உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சிக்கு வரையறுக்கப்பட்ட ஏற்றுமதிச் சந்தைவாய்ப்புக்கள், விளைவு குறைந்த காலங்களில் அரசினால் ஏற்றுமதிகளில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் என்பன முக்கிய காரணிகளாகத் தென்படுகின்றன. மறுபுறத்தில், தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஏறக்குறைய 25 சதவீதம் கொண்டதொரு கணிசமான அதிகரிப்பினைக் காட்டி நின்றது. இதற்கு உலகச் சந்தையில் கிடைக்கப் பெற்ற அதிகரித்த விலை உள்நாட்டில் திடமாக வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளும், தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமையும் (இது நவெம்பரில் கணிசமான அளவில் மீள கொண்டு வரப்பட்டது) முக்கிய காரணிகளாகும். உலகச் சத்தையில் எப்போதும் உயர்ந்த கேள்விகளைப் பெறுவதும், ஒன்றிற்கான உயர்ந்த ஏற்றுமதிக் காய் பெறுமதியினைப் பெறும் இலங்கையின் உற்பத்திப்பொருளான தேங்காய்த் துருவலின் உற்பத்தி வீழ்ச்சி வெளிநாட்டு வருவாயினை இழக்கின்ற ஒரு காரணியாய் அமைந்திருந்தது.

சூறாவழியால் பாதிப்புற்ற பகுதிகளில் உள்ள தென்னை நிலங்களில் மீள நடுகை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்று மாவட்டங்களில் நான்கு நாற்று மேடைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இந் நாற்று மேடைகளிலிருந்து ஏறக்குறைய பத்து இலட்சம் தென்னங் கன்றுகள் வழங்கப்

பட்டும் உள்ளன. இம் மீள் நடுகைத் திட்டம் தொடர்பாக ஐக்கிய இராச்சியம், இத்தாலி, உணவு வேளாண்மை அமைப்பு ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகியவற்றிலிருந்து உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1979 ஆம் ஆண்டினை உற்பத்தியாளருக்கும் நுகர்வோர் விருப்பிற்கும் இடையில் பெருமளவு முரண்பாடுகள் காணப்பட்ட ஆண்டாக வகைப்படுத்தலாம். தெங்குக் கைத்தொழிலினைப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிமுறைகளுக்குட்பட்ட கைத்தொழிலாகக் கருதலாம். இவை உற்பத்தியாளரின் வருமான இழப்பினூடாக நுகர்வோரின் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1979 இன் உற்பத்தி குறைந்த காலத்தில் (நவம்பரில் இருந்து ஏப்பிறல் வரை) தெங்கின் விலை தொடர்ச்சியாக அதிகரித்த வேளையில் உள்ளீட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனைக் கட்டுப்படுத்தியும், அரசுடைமைத் தோட்டங்கள் அவற்றின் உற்பத்திகளை அரசின் கொள்வனவு முகவர் நிலையங்களுக்கே விற்பனை செய்யக் கட்டாயப்படுத்தியும், இத்தேங்காய்களை நகர்ப்புறங்கட்கு விற்பனை செய்தல் வேண்டுமென்ற பல கட்டுப்பாடுகளை இன்றியமையா வண்ணம் விதிக்கும் நோக்குடன் தலையிடும் தேவை ஏற்பட்டது. இத்தகைய வழிமுறைகளை மேற்கொள்வதற்கு முக்கிய காரணம் யாதெனில் நல்ல மனப்பாங்கு இல்லாத சில வர்த்தகர்கள் உற்பத்தி குறைந்த காலங்களில் நுகர்வோரை சுரண்டுகின்ற தன்மையினை இல்லாதொழிப்பதற்கேயாகும். எவ்வாறாயினும் இதன் காரணமாக உற்பத்தியாளர்கள் பருவகால ரீதியாக விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்களினால் ஏற்படும் நன்மைகளை இழக்கின்ற சூழ் நிலையும் தோன்றுகிறது.

தற்போதிருக்கின்ற நிலையில் மதிப்பிடப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு காயொன்றுக்கு 44 சதமாக இருக்கின்றதுடன், உற்பத்தியாளரின் ஆகக் குறைந்த எதிர்பார்ப்பு காயொன்றுக்கு ஒரு ரூபாவாகும். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினையும் அதிகரித்து வரும் உள்ளீட்டுச் செலவினையும் இணைத்து கருத்திற் கொள்கையில் உற்பத்தியாளர் இலாபம் அதிகரிக்காவிட்டால் ஆகக் குறைந்தது அதனைப் பாதுகாப்பது இன்றியமையாததொன்றாகும். தெங்குக் கைத்தொழிலின் நீண்டகால அபிவிருத்தியானது, நுகர்வோரது அன்றி உற்பத்தியாளரது நன்மைகளை நன்கமைந்தவகையில் பங்கீடு செய்வதிலேயே பெருமளவில் தங்கியுள்ளது. தெங்கு, தெங்கு உற்பத்திகளும் இலங்கையின் சராசரி உணவில் 22 சத வீத ஊட்டத்தினை வழங்கும் தன்மையின் காரணமாக தெங்கின் விலையில் ஏற்படும் ஒரு சிறு அதிகரிப்பும் வாழ்க்கைச் செலவின் மீது கணிசமான விளைவினை ஏற்படுத்தும். மறுபுறத்தில் கட்டுப்பாட்டு விலைக் கொள்கைகளும் தெங்கு கைத்தொழிலினை, தேக்கமும், வீழ்ச்சியுமிக்கதொரு கைத்தொழிலாக்கிவிடும் என்ற நிலையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இது கைத்தொழில் பதனிடல் மீது செலுத்தப்படும் முதலீட்டிலும் தங்கியுள்ளது. ஆகவே, உற்பத்தியாளரின் நன்மைக்குரிய பயனளிக்கும் விலையமைப்பொன்றை உருவாக்குவது இன்றியமையாததாகும். எச்சரிக்கையுடனும், மெதுவாகவும் இந்த குறிக்கோளினை அடைதற்காக கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமையை 1979 இன் அபிவிருத்திகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

மூன்று பெரும் ஏற்றுமதிப் பயிர்களைத் தவிர்ந்த ஏனைய எல்லா ஏற்றுமதிப் பயிர்களும் அவற்றில் சில இலங்கையில் நீண்டகாலம் நிலைத்து இல்லாது இருந்த போதிலும் (எடுத்துக் காட்டு மணங்கமழ் பயிர்கள்) 'சிறு ஏற்றுமதிப் பயிர்கள்' என அழைக்கப்பட்டுள்ளன. மிக அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட ஊக்கமளிக்கும் முயற்சிகளின் கீழ் இப்பயிர்கள் மீண்டும் செய்கையில் வரும் அறிகுறிகள் உள்ளன உண்மையான உற்பத்தித் தரவுகிடைப்பதாக இல்லை. ஆனால் உள்ளூர் நுகர்வு குறைவாகலாம். ஏற்றுமதிகள் உள்ளூர் உற்பத்திப் போக்குகளின் குறி காட்டிகளாக எடுக்கப்படலாம்.

1979 இலும் உயர்ந்த ஏற்றுமதிகளில் கறுவா, கராம்பு, கோப்பி, சாதிக்காய், ஏலக்காய் என்பவற்றின் உற்பத்தி 1978 இலும் பார்க்க அதிகரித்துள்ள தென்பதைக் காட்டுகிறது. கராம்பு 66 சதவீதத்தாலும், சாதிக்காய் 33 சதவீதத்தாலும ஏலக்காய் 25 சதவீதத்தாலும் உற்பத்தியில் அதிகரித்துள்ளன. இவ் உற்பத்திகளால் சில காலம் தொடர்ந்தும் மிக உயர்ந்த ஏற்றுமதி விலைகள் கிடைக்கப்பெற்றன. உயர்ந்த உதவு தொகைக் கொடுப்பனவுகள் இவ் ஊக்கமான அபிவிருத்திக்கு உதவியளித்திருக்கக்கூடும். மறுபுறத்தில் ஏற்றுமதித் தரவு, மிளகு, கொக்கோ, பப்பாளிப் பால் உற்பத்திகளில் வீழ்ச்சியடைந்துள்ளதையும் காட்டுகிறது. ஆனால் மிளகு, கொக்கோவின் உள்ளூர் நுகர்வு அதிகரித்துள்ளது.

1979 இல் இப்பயிர்களுக்குரிய மிகச் சாதகமான எதிர்காலமும், ஒற்றோபர் தொடக்கம் உதவித்தொகை கொடுப்பனவுகளின் அதிகரிப்பு சிறு ஏற்றுமதிப் பயிர்களின் புதிய பயிர்ச் செய்கைகளும் மீள்நடுகையும் இரண்டு பங்கிற்கு மேல் அதிகரிப்பதற்கு உதவின. கறுவாயைத் தவிர்ந்த ஏனையவற்றிக்கு 1978 இல் குறைக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகள் முற்றாக இல்லாமலாக்கப்பட்டன. கறுவா விடயத்தில் உலகச் சந்தையில் நிலவிய தனியுரிமை நிலைமையினால் தீர்வை சீராக்கப்படாது இருந்தது.

இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு, பெரும் பங்கு நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த துறையிலிருந்தே வரல் வேண்டும். சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் தனது முயற்சிகளை விரிவாக்கி, மீள்நடுகை உதவுதொகைகள் பயிர்கள் வளரும் காலத்தில் வேளாண்மையாளரின் வருமான இழப்பைக் கணக்கிலெடுத்து அதிகரிக்கப்பட்டன. மேலும் விரிவாக்கப்பணிகள் சந்தைப்படுத்தல் ஆகியவற்றைச் சீர்திருத்த வழிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும்.

**நெல்**

குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி 1979 இன் நெல் உற்பத்தி 19 இலட்சம் மெற்றிக் தொன்னுக (919 இலட்சம் புசல் நெல் அல்லது 13 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி) மதிப்பீடப்பட்டது. இது 1978 இல் பதியப்பட்ட அளவினைவிட சிறிதளவு அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. 1979 இன் பெரும்போகம் என்றும் இல்லாதவாறு 14 மெற்றிக் தொன் (668 இலட்சம் புசல்கள்) கொண்ட ஆகக் கூடிய உறபத்தியைச் செய்ததுடன் முன்னைய போகத்தினை விட 8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் கொண்டிருக்கிறது. ஆயினும் சிறுபோகம் பாதகமான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்பட்டதுடன், 13 சதவீத வீழ்ச்சியுடன் 5 இலட்சம் (251 இலட்சம் புசல்) உற்பத்தி

யை கொண்டிருந்தது. வளமாக்கிப் பயன்பாடு கொடுகடன் ஆகியவற்றில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் மிகச் சாதகமாக அமைந்திருந்த வானிலை நிலைமைகளும் நன்கமைந்த விலை வாய்ப்புக்களுமே பெரும் போக உற்பத்தி வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாய் விளங்கின. தென் மேல் பருவமழை பெய்யாததுடன் சிறுபோகம் கடுமையான பாதிப்புக்குள்ளாகியது. இவை முக்கிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நெற்செய்கையில் காணப்பட்ட கணிசமான வளர்ச்சி ஆண்டு உற்பத்தியின் முழுமையான வீழ்ச்சியினைத் தவிர்த் திருப்பதை காட்டுகின்றன. மேலும் அதிகரித்த வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் நீர் முகாமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை மேலும் வற்புறுத்துவதாக அமைந்துள்ளது எனலாம்.

## அட்டவணை 1.10
## நெல் புள்ளி விபரங்கள் 1978 - 79

| விடயம் | கூறு | 1978 | | | 1979 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத் தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத் தம் |
| விதைக்கப்பட்ட மோத்தப் பரப்பு ... | '000 எக் டெயர்கள் | 575 | 300 | 875 | 5 | 261 | 839 |
| வளமாக்கி வழங்கல்கள் ... | மெ. தொன்கள் | 78367 | 35442 | 113809 | 43829 | 29892 | 73721 |
| வழங்கப்பட்ட கொடுகடன் ... | ரூபா பத்து இல. | 416 | 32 | 448 | 60 | 14 | 74 |
| திருந்திய விதைகளின் கீழான பயிர்ச்செய்கை ... | '000 எக் டெயர்கள் | 475 | 210 | 685 | 448 | வி. கி. | வி. கி. |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பு ... | '000 எக் டெயர்கள் | 553 | 287 | 840 | 551 | 232 | 783 |
| எக்டெயருக்கான விளைச்சல் ... | இ கிரும் | 2733 | 2402 | 2613 | 2819 | 2574 | 2750 |
| உற்பத்தி ... | மெ. தொன்கள் | 1286 | 605 | 1891 | 1393 | 524 | 1917 |
| உ.வி.தி. கீழ் கொள்வன செய்யப்பட்டவை ... | மெ. தொன்கள் | 498 | 177 | 675 | 464 | 77 | 541 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச் சமமான ... | மெ. தொன்கள் | — | — | 243 | — | — | 304 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பெரும்போக காலத்தில் காணப்பட்ட பாதகமான வானிலை காரணமாக 1979 இல் விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் 4 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. வளமாக்கி வழங்கலும் 37 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. இது பெரும்போக காலத்தில் 44 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. பெரும்பாலும் 1979 செத்தெம்பர் வரை வளமாக்கிக்கு நிலவிய உயர்ந்த விலைகள் வளமாக்கிக்கான கேள்வியினை குறைத்துள்ளன. அத்துடன் அறுவடைக் கடன்களும் 1978 இல் ரூ. 4,480 இலட்சத்திலிருந்து 1979 இல் ரூ. 730 இலட்சமாக மிகக்கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்கு 1977/78 பெரும்போக காலத்தில் நிலவிய மாறுபாடான கொடுகடன் விதந்துரைகளின் பின்னர் கொடுகடன் கட்டுப்படுத்தப்பட்டமையே காரணமாகும்.

ஏக்கர் ஒன்றுக்கான நெல்விளைவு 51 புசலிலிருந்து 53 புசலாக 5 சத வீதத்தால் முன்னேற்றமடைந்து காணப்பட்டது. இச் செயலாக்கத்திற்கு வளமாக்கி பயன்பாட்டில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டபோதிலும் நீர்ப்பாசன வசதிகளின் கீழ் விளைவில் கணிசமான வளர்ச்சி காணப்பட்டமையே காரணமாகும். பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குட்பட்ட நிலங்களிலேயே விளைவின் அதிகரிப்பு பெரும்பாலும் நிகழ்ந்துள்ளன. அத்துடன் மரபுரீதியான நடைமுறைகள் நீர் முகாமை ஆகியவற்றில் காணப்பட்ட ஓரளவு திருந்திய நிலைமைகளும் இவற்றிற்கு காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் குறிப்பாக நீர்ப்பாசன நிலங்களில் காணப்படும் விளைவு, உண்மையாய் பெறப்படவேண்டிய அளவிலும் மிகக் குறைவாகவே இருந்து வருகின்றது. முன்னைய ஆண்டறிக்கையில் எடுத்துரைத்தது போன்று ஒரு அலகு நிலத்தின் ஆகக்கூடிய உற்பத்தித்திறனைப் பெற செயலாற்றம் மிக்க நீர்முகாமையுடன் அடர்த்திமிக்க செறிவான வேளாண்மையினை விருத்தி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகும்.

நெல் சந்தைப்படுத்தும் சபை (நெ. ச. ச.) 1979 ஆண்டின் உற்பத்தியில் 29 சதவீதத்தை கொள்வனவு செய்தது. இது முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்ததிலும் பார்க்க 20 சதவீதம் குறைவாகும். அதே வேளையில் சபை மொத்த உற்பத்தியில் 36 சதவீதத்தைக் கொள்வனவு செய்வதில் வெற்றி கண்டுள்ளது. 1979 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து கொள்வனவில் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கிற்கு சிறு போகத்தில் காணப்பட்ட குறைந்தளவு உற்பத்தியும், தனியார் துறையிலிருந்து காணப்பட்ட அதிகரித்த போட்டியுமே காரணமாகும். தனியார் துறையினரின் போட்டி காரணமாக தனது கொள்வனவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறித்து நெ. ச. ச. பெரிதாகக் கருத்திற்கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் அதன் கருத்து யாதெனில் கமக்காரர்கள் நன்கமைந்த விலைகளையே பெற்றுள்ளனர் என்பதாகும். இதுவே நெ. ச. சபையை தோற்றுவிப்பதற்கு முதன்மைக் குறிக்கோளாக இருந்தபோதிலும் நடைமுறையிலிருக்கும் சட்டம் முழு நெற் சந்தையையும் முழுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய கடமையை சபைக்கு வழங்கியுள்ளது. சபை கொள்வனவுகளில் வீழ்ச்சியினை எதிர்நோக்கும் பொழுது அது தனக்கு வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி எந்த சூழ்நிலையிலும் எவ்வளவிற்கு கொள்வனவைச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு கொள்வனவு செய்யமுடியும். ஏனெனில் சபை இதனைத் தனது கடப்பாடாகக் கருதலாம். எனவே சட்டத்தினை இவற்றிற்கு ஏற்புடையதாகத் திருத்துவது நன்றாகும். நெற் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தின் இவைகள் தனியார் துறையின் நெல் குற்றல் கைத்தொழிலில் நடைமுறையில் நிலவும் உறுதியற்ற தன்மைகளைக் களைவதற்கு உதவும்.

நாட்டில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக நிலவிவந்த அரசினது பங்கீட்டு முறையும் வழங்கல் திட்டமும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக உணவு முத்திரைத்திட்டத்தினை அரசு 1979 செத்தெம்பர் ஒன்றில் அறிமுகம் செய்தது. இப்புதிய திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற வீட்டுத் துறையினர் தமக்குரித்தான பெறுமதிகளின் அடிப்படையில் அரிசி, நெல், மா, பாண், சீனி தெரிவுசெய்யப்பட்ட பால் உணவுகள், கருவாடு ஆகிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உணவு முத்திரைகளைப் பெற்றனர். இதுவரை அரசின் செல்வாக்குக்குட்பட்ட இப்பொருட்களின் நடைமுறைப்படுத்தப்பட்ட விலைகள் உண்மையான சந்தை நிலைமைகளினை பிரதிபலிக்கின்றவையாக கருதப்பட்டது, அத்

துடன் தொடக்கத்தில் உணவு முத்திரைகளைப் பெற்றனர். அதன் பிறகு இவை கள் உண்மையான சந்தை நிலைமைகளைப் புலப்படுத்துவனவாக எதிர்பார்க்கப் பட்டது. அத்துடன் தொடக்கத்தில் உணவு முத்திரைகள் உண்மையாக வறுமைப்பட்ட குடும்பங்கள் அடிப்படை உணவு விடயங்களில் மீது செலவிடும் மேலதிக செலவினத்தைத் தாங்கும் என நம்பப்பட்டது. முன்னைய பங்கீட்டு முறையைப் போன்று அல்லாது தகுதி பெற்ற வீட்டுத் துறையினர் கிழமையொன்றுக்கான அரிசி, அல்லது நெல் மற்றும் ஏனைய பொருட்கள் ஏற்கனவே தீர்மானிக் கப்பட்ட நிரம்பலாலோ ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விலைகளாலோ கட்டுப்படாதிருக்கின்றனர்.

மேலும் அரசு பங்கீட்டு முறையினை பெறுவோரது வருமானம் செல்வம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாது பங்கீட்டின் கீழான உத்தரவாத உணவு வழங்கல் விலை மானியம் ஆகிய இரு கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட இயலக்கூடியதாக இருந்தது. அத்துடன் ஓரளவு உறுதியான நிதிப் பொறுப்புக் களுடன் உணவு வருவாய் உதவுதொகை கூடியதேவை கருதி நிற்கும் வருமானம் நோக்கி வழிப்படுத்துவதும் இயலக்கூடியதாயிருந்தது.

உணவு ஆணையாளரின்படி மாதாந்த அரிசி வழங்கல் முத்திரைத் திட்டத்திற்கு முன்னிருந்த 52,000 மெற்றிக் தொன்கொண்ட சராசரி வழங்கலிலிருந்து ஏறக்குறைய 33,500 மெற்றிக் தொன்னுக பெருமளவில் வீழ்ச்சியுற்றது, மறுபுறத்தில் தனியார்துறை வழங்கல்கள் திறந்த சந்தையில் அரிசிக்கான கேள்வி அதிகரிப்பினைச் எதிரீடு செய்வதற்காக தமது தொழிற்பாடுகளை விரிவுபடுத்தின. இப் புதிய நிலையில் சந்தை வீத முறைகளின் அடிப்படையில் நெ. ச. சபையினதும் உணவு ஆணையாளரினதும் கடமைகள் படிப்படியாகக் குறைந்து வெறும் கொள்வனவும், பங்கீடும் செய்யும் முகவர் நிலையங்களாக மாறின. தேசிய பற்றுக்குறையினை இறக்குமதி செய்வதன் மூலம் நெற் சந்தைப் படுத்தும் சபை கமக்காரரின் நெல்லுக்கான சந்தையின் குறைந்த விலையினையும் உணவு ஆணையாளர் நுகர்வோருக்குரிய (அத்துடன் பதிலீட்டுக் கோதுமை மா) அரிசிக்கான சந்தையின் கூடிய விலையினையும் நிர்ணயித்தனர். புதிய கோட்பாட்டின் அடிப்படையில் இவ்விரு கடமைகளும் ஒரு நிறுவனத்தால் திறம்பட ஆற்ற முடியுமெனத் தென்படுகின்றது நெற்சந்தைப்படுத்தும் சபை எவ்வளவு தூரம் கமக்காரர்களின் ஆண்டு அறுவடையின் எத்தனை வீதத்தினைக் கொள்வனவு செய்தது என்பது தொடர்பாகத் தனது அடைவினை அளவிடாது, கமக்காரருக்கான நெல் / அரிசி சந்தையினை உறுதிப்படுத்துவதிலேயே தனது செயற்றிறன் தங்கியுள்ளதனை அறிதல் வேண்டும். அதே வேளையில் உணவு ஆணையாளர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விலைகளில் உணவு விடயங்களை உணவு முத்திரைகளுக்காக மாற்ற உதவியளித்தது. கடப்பாடு கொள்ளாது செயற்றிறன் மிக்க நிரம்பல் முகாமை மூலம் நுகர்வோருக்கான சந்தையினை உறுதிப்படுத்தல் வேண்டும். ஆண்டின் தற்போதைய மொத்த விற்பனை அடிப்படையில் இவ்விரு நிறுவனங்களும் புதிய கோட்பாட்டு வழிமுறைகளின் அடிப்படையில் அவற்றிக்கே உரித்தான கடமைகளுக்கான தெளிவுமிக்க வரையறையுடன் இயங்கிக்கொண்டு செல்வதற்கான அறிகுறிகளைக் காணக்கூடியதாக உள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலை புசலுக்கு ரூ. 40 என்ற நிலை 1979 நவெம்பரிலிருந்து தொடர்ந்தும் நடைமுறையிலிருந்து வருகின்றது. எவ்வாறாயினும் புசலுக்குக் கணிசமான இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி விலை 1978 இல் ரூ. 54 இலிருந்து 1979 இல் ரூ. 61 ஆக அதிகரித்துள்ளது. மறுபுறத்

தில், உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக உற்பத்தியாளர் இலாபம் 1979 இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தே வந்துள்ளது. அத்துடன் நெற்பயிர்ச் செய்கைக்கு கொடுகடன் பெறுவதில் இருந்த கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமாக்கப்பட்டன. கமக்காரரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினையும் எதிர்நோக்கி வருகின்றனர். உற்பத்தியாளரின் இலாப எல்லையில் ஏற்படும் வீழ்ச்சி மீள முதலிடலுக்கும் அவனது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கும் அவன்கண் உள்ள மூலவளங்களைக் குறைக்கும். இந்த முதன்மைத் துறையில் உற்பத்திக்கான ஊக்குவிப்புக்களின் வெற்றிக்கு கமக்காரரின் நடைமுறை உண்மை வருவாய்களில் ஒரு சீர்திருத்தம் வேண்டியதொன்றாகும்.

சீனி

1979இல் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்திலிருந்தான தூய்மைப்படுத்தப்பட்ட சீனி உற்பத்தி தற்காலிகமாக 18,908 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 26 சதவீத கூடிய வீழ்ச்சியைக் காட்டுகிறது. இதற்குப் போதுமானதற்ற நீர் வழங்கலும் சூறாவளிப் பாதிப்புமே காரணமாக அமையும். மறுபுறத்தில் சீனி இறக்குமதிகள் 1978 இன் 106,335 தொன்களில் இருந்து 48 சதவீதத்தால் 1979இல் 241,449 தொன்களுக்கு அதிகரித்தது. (உணவு ஆணையாளரின் தரவு) சீனி இறக்குமதிகளின் பேரிலான செலவினம் 1978இன் ரூ. 6,600 இலட்சத்திலிருந்து ரூ. 9,280 இலட்சத்திற்கு 1979இல் அதிகரித்தது.

குறிப்பிடத்தக்களவு இறக்குமதிப் பதிலீட்டு முக்கியத்துவம் காரணமாக, இலங்கையில் வெகுமுன்பாக தொடங்கப்பட்ட அரச துணைக்கைத் தொழில்களில் ஒன்றாக தூய்மைப்படுத்தப்பட்ட சீனிஉற்பத்தி இருந்தது. தொடக்கத்திலிருந்தே போதுமான கரும்பு எடுப்பதற்கு ஒழுங்குபடுத்த இயலாமையிலிருந்து எழும் பிரச்சினைகளால் அது பாழாக்கப்பட்டது. பெரிய அளவில் அரச முகாமை கரும்புப்பயிர்ச் செய்கை, தனியார் முகாமையின் கீழேனும் முன் ஏற்படாத அளவில் முயற்சிக்கப்பட்டது. சீனி விலைக்கு உதவும் அரசின் விலையிடல் கொள்கை கைத்தொழிலின் பிரச்சினைகளைக் கூட்டியது. இதன் விளைவாக 20 ஆண்டிற்கு மேற்பட்ட முயற்சிக்குப்பின்னர் நாடு தனது தேவையின் 8 சதவீதத்தினையே உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தது.

தெளிவாக சீனியில் இறக்குமதிப்பதிலீடு எதிர்பார்ப்புக்கள் கருத்திலெடுக்கக்கூடியவை. உலகத்தின் பெரிய உற்பத்தியாளரான இந்தியாவில் செய்வதுபோன்று பதனிடப்படுத்தும் ஆலையைச்சுற்றித் தனி கமக்காரர்கள் குடியேற்றத்தை அமைப்பது கூட்டுத்தாபனத்திற்கு அத்தகைய பெரிய அளவில் அதன் பயிற் செய்கையை ஒழுங்குபடுத்தும் பெரும் முயற்சிக்கு எளிதாக வசதி அளிக்க கூடியதாகும். எய்தக்கூடியவிலையிடல் கொள்கை கமக்காரர்களிடையே அரிசி, கரும்புப் பயிர்ச்செய்கை இரண்டிற்குமிடையே எக்காலமுமுள்ள முரண்பாட்டை தீர்த்தல் வேண்டும். இத்துறையே பெருமளவிலான மூலதன இடல்களை எதிர்பாராது கொள்கை மாற்றங்கட்கு ஏற்ப விரைவில் உற்பத்தியை ஏற்படுத்தக்கூடிய ஒருதுறை போல் தோன்றுகிறது.

சிறு உணவுப் பயிர்கள்

சிறுபோகத்தின் எண்தொகைகள் கிடைக்கப்பெருததால் துணை உணவுப் பயிர் உற்பத்தியையிட்டு முழுமையான விளக்கத்தைப்பெற முடியாது. 1978/79இன் பெரும் போக புள்ளி விபரங்களை நோக்குமிடத்து சென்ற ஆண்டைத் தொடர்ந்து 1979இல் சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தியில் மேலும் வீழ்ச்சி இருந்தது. இக் குறைவு, சோளம். கேழ்வரகு, மிளகாய், மரவள்ளி, வற்ருளை என்பவற்றில் அதிகமாகத் தெரிந்தது.

வழக்கமான காரணிகளான போதுமானதற்ற சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், உள்ளீடுகளின் உயர்ந்த விலை போன்றவையே இவ்வகையில் சிறு உணவு உற்பத்தியில் ஊக்கமின்மைக்கு ஏதுவாயிருந்தன. ஆனுல் இந் நிலைக்கு முதன்மையான பொறுப்பான காரணியாக, உணவு விடயங்களின் மேல் அரசின் விலையிடல் கொள்கை அமைகிறது. மா, அரிசியின்மேல் உதவு தொகைகள் ''தாங்கிருப்புத் திட்டங்களின்'' கீழ் கூடுதலான இறக்குமதிகள், என்பன நுகர்வோரின் நன்மையின் பொருட்டு விலைகளைக் குறைத்துள்ளதாகத் தெரிகிறது. அரசு மாவின் விலையை இரட்டிப்பாக்கி (எல்லையளவுவிலை இருந்த போதிலும்) 1979/80 பெரும் போகத்திலிருந்து ''ஆகக்குறைந்த விலைத் திட்டங்களை'' அறிமுகப்படுத்தியிருப்பினும் முன்பு கூறியதுபோலவே இவைகள் போதுமானதற்றவையாகத் தெரிகிறது.

மீனும் கால்நடையும்

கடற்ெருழில் அமைச்சு 1979இல் மீன் உற்பத்தி 170,554 மெற்றிக் தொன்கள் என தற்காலிகமாக மதிப்பிட்டுள்ளது. இது 9 சதவீத அதிகரிப்பாதலில் ஒரு நன்கமைந்த செயற்பாடாகும். ஏனெனில் நாட்டின் மீன்பிடிக் கப்பல்களில் ஆறில் ஒன்று 1978 நவெம்பர் சூருவளியினுல் சேதப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிவள்ளம், உந்து மீன்பிடிப் பொறிகள் என்பவற்றின் கட்டற்ற இறக்குமதி, பொறிமயமாக்கப்பட்ட வள்ளங்களின் வழங்கல்கள், அதிகளவு சீர் திருந்திய விலைகள்போன்றவை இம் முன்னேற்றத்திற்கு பொறுப்பானவையாகும். கடற் தொழில் கூட்டுத்தாபனம் தனது சிக்கனமற்ற உற்பத்தியைக் கைவிட்டு மதிநுட்பமான கொள்வனவிலும் விற்பனையிலும் கவனத்தைச் செலுத்தியது. எனினும் உயர்வான திறந்த சந்தை விலைகள் காரணமாக அதன் கொள்வனவு 30 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மறுபக்கத்தில், கருவாடு இறக்குமதிகள் 1979இல் 6,828 இலட்சம் மெற்றிக் தொன்களாக இருக்க ஏனைய மீன் இறக்குமதிகள் 12 மெற்றிக் தொன் இறக்குமதித் தொகையைக் கொண்டிருந்தது. இது ரூ. 190 இலட்சம் கொண்ட இறக்குமதித் தொகையைக் கொண்டுள்ளது. 1978இல் 5 ஆண்டு ''பெருந் திட்டம்'' ஒன்று மீன்பிடி கைத்தொழிலுக்கு 1983 அளவில் 351,553 மெற்றிக் தொன்களை அடையும் நோக்குடன் உற்பத்தியை உயர்த்த என வரையப்பட்டது. இவ் உற்பத்தி நோக்கு எய்தப் பெற்ருல் அது தற்போதைய ஆளொன்றின் நுகர்வான 15 கி. கி. ஐ 23 கி. கி. ஆக 1983இல் அதிகரிக்கும்.

1979இல் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 1,980 இலட்சலிற்றராக மதிப்பிடப்பட்ட பால் உற்பத்தி 1978இன் மட்டத்திலும் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. அண்மைக் காலங்களின் அதிகளவான கால்நடைகள் இறைச்சிக்காகக் கொல்லப்பட்டதால் தேசிய கால்நடையின் குறைவு பால் உற்பத்தியைப் பாதித்தது. உற்பத்தியில் வீழ்ச்சி இருந்த போதிலும் பால் அதன்

உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. இச்சபையால் வழங்கப்பட்ட உயர் விலைகளும் பால் சேகரிப்பு நிலையங்களைக் கூட்டியமையும் காரண மாகும். 1979இல் பால் இறக்குமதிகளின் பெறுமதி ரூபா 4,790 இலட்ச மாகும். இது இறக்குமதி பதிலீட்டுக்கு கூடிய வாய்ப்புள்ளதை எடுத்துக் காட்டினாலும் உற்பத்தியாளருக்கு இருந்த இலாப எல்லை போதியதற்றதாக இருக்கலாம்.

குடிமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் முட்டை உற்பத்தி 20 சதவீதத் தால் 1979இல் 4,320 இலட்ச முட்டைகளுக்கு அதிகரித்துள்ளதென மதிப் பிட்டுள்ளது. இறைச்சி மீனின் அதிகரித்த விலையும் கோழித்தீன் எளிதாகக் கிடைக்கப்பெற்றமையும் முட்டைகளுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்விக்குக் காரணமாக அமையும்.

### கிராமியக் கொடுகடன்

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழும் (அஉகி கொதி) 1979இல் கிராமிய வங்கித்திட்டம், வேளாண்மைப்பணி நிலையங்களி லுள்ள இலங்கை வங்கி துணைஅலுவலகங்களின் கீழும் வழங்கப்பட்ட கொடு கடன் 67 சதவீதத்தால் மிகவும் வீழ்ச்சியுற்றது. இவ் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் அரைப்பங்கிற்கு சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட கடனின் நாலில் ஒன்றிலும் குறைவாக இருந்த போதிலும் பயிர்ச்செய்கைக்கே வழங்கப்பட் டுள்ளது வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் மக்கள் வங்கி ரூ. 260 இலட்சம் அல்லது 25 சதவீதத்தை வழங்கி இருக்கையில் இலங்கை வங்கி ரூ. 490 இலட் சத்தை அல்லது 46 சதவீதத்தை வழங்கியதன்மூலம் கிராமியத் துறைக்கு கடன் வழங்கும் ஒரு முதன்மை நிறுவனம் என்ற இடத்தைப் பெற்றது. பயிர்ச்செய்கை அஉகிகொதி இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் என்பவற்றின் விபரங்கள் புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1 11**

**கிராமியக் கொடுகடன் (அ) 1978 - 79**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| நோக்கம் | மக்கள் வங்கி (ஆ) 1978 | மக்கள் வங்கி (ஆ) 1979 | கிராமிய வங்கி 1978 | கிராமிய வங்கி 1979 | இலங்கை வங்கியின் துணை அலுவலகம்(இ) 1978 | இலங்கை வங்கியின் துணை அலுவலகம்(இ) 1979 | மொத்தம் 1978 | மொத்தம் 1979 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. பயிர்ச் செய்கை | | | | | | | | |
| 1,1 நெல் ... | 154.1 | 25.8 | 4.5 | 4.6 | 100.9 | 25.5 | 259.5 | 55.9 |
| 1,2 சிறு உணவுப் பயிர்கள் ... | 122.4 | 20.5 | 0.5 | 1.0 | 60.2 | 17.7 | 183.1 (ஈ) | 39.2(ஈ) |
| 1.3 கரும்பும் பருத்தியும் ... | 27.8 | 5.3 | 4.0 | 3.6 | 29.1 | 7.5 | 60.9 | 16.4 |
| 2. கால்நடை வளர்ப்பு ... | 3.9 | — | — | — | 11.6 | 0.3 | 15.5 | 0.3 |
| 3. சிறுகைத்தொழில் ... | | | 1.5 | 1.7 | 0.7 | 0.6 | 2.2 | 2.3 |
| 4. பொறிகள் கருவிகள் | | | 1.3 | 1.4 | 0.6 | 0.9 | 1.9 | 2.3 |
| கொள்வனவு ... | | | | | 30.3 | 11.9 | 30.3 | 11.9 |
| 5. கடன் மீட்பு ... | | | | | | | | |
| 6. நுகர்வு . | | | 4.1 | 3.7 | ... | ... | 4.1 | 3.7 |
| 7. வீடமைப்பு, மின்னூட்டல் | | | 1.1 | 1.0 | 0.6 | 0.5 | 1.7 | 1.5 |
| நீர்வழங்கல் .. | | | | | | | | |
| 8. வர்த்தகமும் ஏனையவையும் ... | | | 14.0 | 15.8 | 2·4 | 2,6 | 16.4 | 18.4 |
| | | | 3.7 | 3.4 | 6.2 | 6.6 | 9.9 | 10.0 |
| மொத்தம் | 154.1 | 25.8 | 30.2 | 31.6 | 141.7 | 48.6 | 326.0 | 106.0 |

மூலம்: மக்கள் வங்கி, 'இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி

(அ) நகை அடகின்கீழ் மேலதிப்பற்றுக்கள் முற்பணங்களை விலக்கும்

(ஆ) அ.உ.கி.தொ.தி. இன் கீழ்

(இ) அ.உ.இ.கொ.தி. கீழ் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்

(ஈ) அ.உ.நி.கோ.க.தி.இன் கீழ் அட்டன் நெசனல் வங்கியினால் வளங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

நெற்பயிர்ச் செய்கைக்கு 1979 / 80 பெரும்போகம் முழுவதற்கும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1979 இறுதியில் ரூ. 310 இலட்சமாகும். இது கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியிலும் பார்க்க 35 சதவீத அதிகரிப்பாகும். வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான கொடுகடன் கடன்பாடுகளை கருத்திலெடுக்கும் போது இது குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். சிறு உணவுப் பயிர்களான கரும்பு, பருத்தி போன்றவற்றிற்கு அளித்த கொடுகடன் மிகச் சிறிய அளவேயாகும்.

1967 தொடக்கம் 1979 சிறுபோக இறுதிவரை நெற்பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட ரூ 11,560 இலட்ச மொத்தக் கடன்களில் ரூ. 5,250 இலட்சம் அறவிடப்பட்டது. கடன் கட்டத் தவறிய தொகை 54 சதவீதமாகும். ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 3,120 இலட்சம் கொண்ட மொத்தத் தொகையிலிருந்து ரூ. 1,400 இலட்சம் மட்டுமே அறவிடப்பட்டதுடன் கடன்களின் 54 சதவீதம் கட்டத்தவறியவர்களாவர். அரசின் உத்தரவாதமின்றி முதல் பருவகாலமாகிய 1978 / 79 பெரும்போக நெல் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட ரூ. 660 இலட்சத்தில் ரூ. 380 இலட்சம் அல்லது 58 சதவீதம் அறவிடப்பட்டது. 42 சதவீதம் கடன் கட்டத்தவறியவர்களாவர் ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 160 இலட்சக் கடன்களில் ரூ. 90 இலட்சம் அல்லது 55 சதவீதம் அறவிடப்பட்டது. கடன் கட்டத்தவறியவர்கள் 45 சதவீதமுமாகும். அண்மைக் காலங்களில் சிறந்த அறவீடு வீதங்களை வங்கிகளின் சீர்திருத்திய கொடுகடன் மேற்பார்வையாலும் மிக நாணயமுள்ளவர்க்கே கடன்களென வரையறைப்படுத்தலாலும் எய்தப்பட்டன.

வேளாண்மைக் கொடுகடனின் வீழ்ச்சி என்பது கமக்காரர் அதிகமாக மிக உயர்ந்த செலவில் கிடைக்கப்பெறும் தனது கடன் தேவைகளைப் பெறுவதற்கு நிறுவனச் சார்பற்ற நிலையங்களை நாடவேண்டி இருந்ததைக் குறிக்கும். இலங்கையின் உணவுப் பயிர்த்துறையில் 1–2 ஏக்கர்களுக்கும் குறைவான சிறு உடமைகள் பெரும்பான்மையாக இருந்தன. இதனால் கமக்காரர்களில் குறிப்பிடத்தக்களவு வீதத்தினர் கொடுகடன் வசதியின்றியிருந்தனர்.

கடந்தகாலத்தில் கிராமியக் கொடுகடன் திட்டங்களுடன் தொடர்பான முதன்மை சிக்கல்கள் இரண்டாகும். முதலில் கடன்கள் அரசின் நன்கொடைகள் போல் வழங்கப்பட்டன. அத்தகைய கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய தேவை கணிக்கப்படவில்லை. போதுமான அலுவலர்கள் இல்லாமையினால் வங்கிகள் கடன் பயன்படுத்தலை மேற்பார்வை செய்ய முடியவில்லை. இரண்டாவதாக கடனின் பெரும்பாகம் தம் பிழைப்பு மட்டத்தில் இயங்கும் சிறு கமக்காரர்களுக்கே கொடுக்கப்பட்டது. பெரும் பாலும் அவர்களிடம் விற்பனை மிகை இல்லாதிருந்ததால் கடன்களை மீளக் கொடுக்க முடியவில்லை. எந்தவித கிராமியக் கொடுகடனும், வெற்றிகரமாக அமைவதற்கு இவ் அடிப்படையான சிக்கல்களுக்குத் தீர்வு காணப்படல் வேண்டும். நிறுவனமய கொடுகடன் மூலங்களை இக் கமக்காரரின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தல் வேண்டும். இது சிறு அளவிலான பண்ணைகளுக்கு இயலாததொன்றாகும். எனவே சிக்கனமற்ற சிறு உடைமைகளை ஒன்று சேர்க்கும் வேளாண்மைச் சீர்திருத்தமொன்று வளம் பெறக்கூடிய கிராமிய கொடுகடன் திட்டத்திற்கு முதல் செய்தல் வேண்டும். வங்கிக் கொடுகடன், பணிக்கூட்டுறவுகள் அடிப்

படையில் அமைக்கப்பட்ட கமக்காரர் தொகுதிகளினால் இயக்கப்பட்ட அருகேயுள்ள நிலப்பரப்புகளுக்கு கிடைக்கற்பாலதாக்கலாம்: இவை வங்கிகளினால் நுணுக்கமாக மேற்பார்வையிடப்பட்ட கடன்கள் வங்கி அலுவலர்களுக்கு மேலதிக வேலையை ஏற்படுத்துவதாய் அமைந்தது. இதனை ஈடு செய்வதற்கு சலுகை ஊக்கவூதியங்கள் இருத்தல் வேண்டும். வங்கிகளும் அவற்றின் கிளைகளும் கிராமியத் துறைக்கு இவ்வகையில் கடன் அளிப்பதற்கு உதவுமுகமாக தமது மூலங்களில் ஒரு பகுதியை ஒதுக்குமாறு வேண்டப்படல் வேண்டும்; அத்துடன் அண்மைக்காலங்களில் விரும்பிய கிளை நீடிப்பு செயற்றிட்டங்கள் காரணமாக தமது சிறிய எண்ணிக்கையான பயிற்றப்பட்ட அலுவலரை பரம்பலாக வைத்து இருந்த வங்கிகள் தமது பயிற்சித் திட்டத்தை குறிப்பாக கிராமிய வேளாண்மைக்கு கடன் அளிப்பதை கடுமையாகக் கருத்தில் எடுத்தல் வேண்டும். பல்வேறு மாவட்டங்களில் தொடங்கப்பட்ட பன்னாட்டு அடிப்படையில் ஆதரவு பெற்ற "ஒன்று சேர்க்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்" வங்கிகள் கூடிய நம்பிக்கையுடன் கிராமிய வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்குரிய சூழ்நிலையை அளிக்கும். இவ் அம்சங்களில் வங்கிகள் கருத்துள்ள நடவடிக்கையை தொடங்க முடியுமாயின், கொடுகடன் உத்தரவாதத்தை மிக சாதாரண மட்டத்தில் மீள அறிமுகப்படுத்தலாம். மத்திய வங்கி தனது முந்திய அபிவிருத்தி நிதி திணைக்களத்திற்கு புது அமைப்புக்கொடுத்து கிராமிய கொடுகடன் துறையில் புதிய செயல்களை மேற் கொள்ளும் நோக்குடன் புதிய கிராமியக் கொடுகடன அபிவிருத்தி நிதித் திணைக்களமொன்றை அமைத்துள்ளது.

## கைத்தொழில்

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (பெருந்தோட்டத் துறையின் ஏற்றுமதி பதப்படுத்தல் கைத்தொழில்கள் தவிர்ந்த) 1978இன் ரூ. 88,520 இலட்சத்திலிருந்து 1979இல் ரூ. 107,810 இலட்சமாக அதிகரித்து 22 சதவீத விரிவாக்கத்தினை வெளிப்படுத்துமென மதிப்பிடப்பட்டது.[1] விலை மாற்றங்களுக்கான[2] சீராக்கங்கள் செய்ததன் பின்னர் கைத்தொழில் உண்மை வீதம் 1978இன் 11 சதவீதத்துடன் ஒப்பீடுகையில் தற்காலிகமாக 1979இல் ஏறக்குறைய 4 சதவீதமாக அமையும் என மதிப்பிடப்பட்டது.

1979இல் தயாரிப்புத்துறையின் முழுமையான செயலாக்கம் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உயர்ந்த மட்டத்தினைவிட ஓரளவில் குறைந்தே காணப்பட்டது. ஆண்டு 1977ஐத் தொடர்ந்து பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட தாராளமாக்கலின் காரணமாக ஒரு உறுதியான காலப்பகுதியாக நடைமுறை ஆண்டின் கருதலாம் இவ்வாண்டுக் காலப்பகுதியில் இறக்குமதிப் போட்டிகள் அதிகரித்திருந்த அதே வேளையில் சீராக்கல் தொடர்பான பிரச்சினைகளும் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளமையைத் தெளிவாகக் காணமுடிகின்றது. எனினும் முன்னைய ஆண்டினைப் போன்ற நன்கமைந்த உற்பத்தி இயல

1. கடந்த காலங்களில் போன்று உள்நாட்டு கைத்தொழிலில் பெரும்பங்கு வகிக்கும் 1,500 கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பாக மத்திய வங்கி நடாத்திய அளவீட்டின் அடிப்படையில் இத்தரவு அமைந்துள்ளது. விபரங்கள் அடுத்து வெளிவரவுள்ள பொருளாதார மீளாய்வில் தரப்படவுள்ளன.

2. நம்பகமான கைத்தொழில் விலைச்சுட்டெண்கள் இன்மையால் தனியார்துறையின் உற்பத்தி பெறுமதியினைக் குறைப்பதற்கு மொத்த விலைச்சுட்டெண்கள் தொடர்பான, அவற்றின் கூறுகள் பயன்படுத்தப்பட்டதுடன் பொது துறையின் உற்பத்திப் பெறுமதியினைக் குறைப்பதற்கு தொகையளவுச் சுட்டெண்கள் பயன்படுத்தப்பட்டன.